
T03936
R001J01

श्रीकामकोटिग्रन्थावलिः १७

# अद्वैत सभा सुवर्ण महोत्सव प्रबन्ध

## विषयसूचिका

29



3936

श्री आदिशङ्करभगवत्पादाः

श्रीकामकोटिकोशस्थानम्, कुम्भघोणम्.

॥ श्रीः ॥

# ॥ अद्वैतसभासुवर्णमहोत्सवः ॥

कुम्भघोणम्

28–2–'45 — 8–3–'45

गीर्वाणवाण्यां द्रविडभाषायां आङ्गभाषायां च

अद्वैतदर्शनमहत्त्वप्रतिपादकनिबन्धनात्मकाद्वैताक्षरमालिका-
परनामधेय सुवर्णमहोत्सवप्रबन्ध

## विषयसूचिका



श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशिता
५७, पश्चिम डबीर् वीथी, कुम्भघोणम्

स्वं कोशस्थानस्यैव] 28-2-45 [मूल्यम् कलाचतुष्टयम्

கும்பகோணம் அத்வைத ஸபா பொன் விழா

28-2-'45 — 8-3-'45

ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும்

அத்வைத தர்சனத்தின் பெருமையை விளக்கும்
கட்டுரைகளைக் கொண்ட

# அத்வைதாக்ஷர மாலிகா

என்னும்

# ஸுவர்ண மஹோத்ஸவப் பிரபந்த

## விஷய ஸூசிகை

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
57, மேல டபீர் தெரு, கும்பகோணம்.

பதிப்புரிமை] 28-2-'45 [விலை அணா நான்கு

॥ ओं ॥

॥ श्रीगुरुभ्यो नमः ॥



ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

नारायणं पद्मभुवं वसिष्ठं
शक्तिं च तत्पुत्रपराशरं च ।
व्यासं शुकं गौडपदं महान्तं
गोविन्दयोगीन्द्रमथास्य शिष्यम् ॥

श्रीशङ्कराचार्यमथास्य पद्म-
पादं च हस्तामलकं च शिष्यम् ।
तं त्रोटकं वार्तिककारमन्यान्
अस्मद्गुरून्सन्ततमानतोऽस्मि ॥

श्रुतिस्मृतिपुराणानाम्
आलयं करुणालयम् ।
नमामि भगवत्पाद-
शङ्करं लोकशङ्करम् ॥

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# விஞ்ஞாபனம்

உண்மையை யுணர விரும்புவோர் எவ்வுண்மையை உணர்ந்து பூர்ண சாந்தியை அடைகின்றார்களோ அதுவே உண்மை. 'ஒருமையை உணர்பவனுக்கு மயக்கமேது? துயரமேது?' என்று உபநிஷத் கூறுதலால் ஒருமையே உண்மை; அத்வைத வித்யைதான் துயரங்களை யெல்லாம் வேருடன் அழிக்க வல்லது. பிறவிக்குக் காரணம் கருமம். கருமங்களுக்கு மூலம் பற்று; அப்பற்றாகிய குற்றத்திற்குக் காரணம் இரண்டாவது பொருளின் தோற்றம்; தோற்றத்திற்குக் காரணம் பொய்யறிவு. அப்பொய்யறிவு இரண்டற்ற ஒன்றை அறிந்து உணர்ந்து அனுபவிப்பதாலேதான் நீங்கும். காரணமாகிய மண்ணைக்காட்டிலும் காரியத்தில் எஞ்சியுள்ளவை பெயர் வேறுபாடும் உருவ வேறுபாடுமே; அதாவது, நாமரூபங்களே. 'கார்ய உருவம் வாயால் மொழியப்படும் பெயர்; மண் மட்டுமே உண்மை' என்று வேதம் கூறுவதிலுள்ள ஏகாரத்தால் காரிய வுருவம் கற்பனை என்பதும் காரணமே உண்மைப் பொருள் என்பதும் தெளிவு. இதுதான் அத்வைத சித்தாந்தம். இதை விளக்கும் அத்வைத ஸபாவின் பொன்விழா நினைவு மாலையாக இனி வெளியிடப்போகும் ஸுவர்ண மஹோத்ஸவப் பிரபந்தத்தின் விஷயச் சுருக்கமாய் இச் சிறுநூல் பொன் விழாக் கொண்டாட்ட சமயத்தில் ஆஸ்திகர்களின் உபயோகத்திற்காக வெளியிடப்பெற்றது.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்.

ஸ்ரீ சந்த்ர மௌலீச்வராய நம:

# ஸுவர்ண மஹோத்ஸவ ப்ரபந்தம்

## கும்பகோணம் அத்வைத சபையின்

# பொன் விழா நினைவு மாலையான

## அத்வைதாக்ஷர மாலிகையிலுள்ள வியாசங்களின்

# விஷய ஸூசிகை

அத்வைதாக்ஷரமாலிகை என்பது ஸம்ஸ்க்ருதத்தில் 51 வியாசங்களையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் அநேக வியாசங்களையும் கொண்டு விளங்கும். நான்முகத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கிக்கொண்டிருக்கும் ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் கிருபை கூர்ந்தருளப்பெற்ற ஸ்ரீமுகம் அத்விதீயமாயும் அத்வைதானந்தப் பிரகாசமாயும் விளங்கும். ஆதி ஆசார்யர்களான ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீ தக்ஷிணா மூர்த்யஷ்டகத்தையும் ஏனையப் பெரியோர் அருளிச்செய்த மங்களாசரணங்களையும் பாயிரமாகக் கொண்டு அத்வைத ஸித்தாந்த ஸங்க்ரஹம் என்னும் வியாசத்தோடு தொடங்கும்.

“அத்வைதமே ஸகல வித்யைகளின் உட்கருத்தாக அமைந்துள்ளது; பிராசீன ஆசார்யர்கள் அனைவர்க்கும் அத்வைதமே பரம தாத்பர்யம். அதுவே வேத வேதாங்கங்களின் பொருள். ஶ்ருதிகளும் மஹா பாரதம் முதலிய ஸகலப் பிரபந்தங்களும் புராணங்களும் அத்வைதத்தையே

உட்கருத்தாகக் கொண்டு விளங்குகின்றன. அத்வைதப் பிரகாசமே ப்ரஹ்ம ஸூத்ரங்களிலும்ஒளிர்கின்றது என்பது விமர்சித்துப் பார்த்தால் விளங்கும்; ஆசார்ய ரத்னங்களாய்த் தோன்றிய சங்கர பகவத்பாதர்கள் முதலானவர்கள் அத்வைதத்தையே ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள். அத்வைத ஞான வாசனை ஸ்ரீசந்த்ர மௌளீச்வரருடைய அனுக்ரஹமின்றித் தோன்றாது "என்று ஸ்ரீ கண்டபாஷ்ய வ்யாக்யானஞ் செய்யும்போது ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஶ்ருதி, ஸ்ம்ருதி புராணங்களுக்கு உறைவிடமாய்க் கருணையங் கடலான ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களாலும் வேதாந்த வாக்கியங்களுக்கு எல்லாம் அத்விதீயப் பொருளான ப்ரஹ்மத்திலேதான் தாத்பர்யம் என்று கண்டோக்தியாகச் சொல்லப்பட்டுள்ளது. எளியவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்றே எழுந்த நூல்களும் ஆசார்யர்களும் படிக்கட்டுகளாக வேறு ஸித்தாந்தங்களை விளக்கிய போதிலும் அவர்களிற் பெரும்பாலோர்க்கும் அத்வைதமே பரம தாத்பர்யம் என்று தீக்ஷிதரவர்கள் அருளிய சுலோகத்தாலேயே அறிந்து கொள்ளலாம். எனவே, எங்கெந்த நூல்கள் எவ்வெவ்வாறு எவ்விடங்களில் எல்லாம் அத்வைதத்தை விளக்குகின்றன என்று ஆராய்ந்து அறிந்தவற்றை, உண்மையை ஆராய்ந்தறிவதில் அவா வுடையவர்களின் முன்னர் ஸமர்ப்பித்துக் கொள்வதே அத்வைத வித்தையைக் கைக்கொண்ட பண்டிதர்கள் செய்யவேண்டிய முதற் கடமை யென்று கருதியே இக்கட்டுரைகள் எழுதித் தொகுக்கப் பெற்றுள்ளன.

இந்த ஆராய்ச்சித் தொகுதிக்குத் தலையங்கமாக அமைந்துள்ள அத்வைத ஸித்தாந்த ஸங்க்ரஹம் என்னும் வியாசம் அத்வைத தர்சனத்தின் விசேஷ லக்ஷணங்கள் இவை என்று விளக்குகின்றது. அவையாவன: (1) ப்ரஹ்மம் ஸர்வாத்மகம் (2) அதிஷ்டானமா யுள்ள ப்ரஹ்மத்தில்

அஞ்ஞானத்தாலே கல்பிக்கப்பட்ட பிரபஞ்சம் மித்யை (3) ஞானத்தாலேதான் மோக்ஷம் (4) ஜீவப்ரஹ்மாபேதம் (5) ப்ரஹ்மம் நிர்குணம் (6) ஜீவன்முக்தி (7) மூவகை ஸத்யம் (8) ஹரிஹராபேதம். இந்த லக்ஷணங்களில் யாதொன்றேனும் ஒரு நூலிலே எங்கேனும் காணப்பெற்றால், அந் நூலிலே த்வைத வாக்கியங்கள் பல மலிந்திருந்தாலும், அந்நூல் முழுவதுமே அத்வைதத்தைப் போதிப்பது என்று கொள்ள வேண்டும். ஏனென்றால், த்வைதத்தைப் போதிப்பதற்கு அத்வைத வாக்கியம் அவசியமில்லை; ஆனால், த்வைத ஞானத்தைக் கொண்டு அனுஷ்டிக்கப் பெறும் கர்மாக்கள் உபாஸனைகள் முதலிய ஸாதனங்களால் அத்வைத ஞானம் விளக்கமுறும். ஆதலாலும், தத் தமது வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்தும் தவஞ் செய்தும் ஹரியை ஆராதித்து வைராக்கியம் முதலிய நான்கு ஸாதனங்களையும் பெறுகிறான் என்று ஸ்ரீ பகவத்பாதர்களே விளக்கியிருப்பதாலும், த்வைத வாக்கியங்கள் ஒரு நூலிலே அதிகமாகக் காணப்படுவது அத்வைதத்திற்குப் பாதகமாகாது. இந்த நியாயத்தை அனுசரித்தே, இவ் வாராய்ச்சிக் கட்டுரைகள் எழுதப் பெற்றுள்ளன.

மேலே எட்டு வகையாக வகுக்கப் பெற்ற அத்வைத லக்ஷணங்களுள் ஹரிஹராபேதத்தை நன்றாக வற்புறுத்த வேண்டுமென்றுகொண்டு அதுவே முதலில் வைக்கப் பட்டது. வ்யாவஹாரிக தசையில் உபாஸனை செய்வதற்கான ஸகுண மூர்த்தியின் ஈஶ்வரத்துவம் அத்வைத ஸித்தாந்தத்திற்கு அவசியமாகும். 'இவையெல்லாம் எங்கிருந்து தோன்றி எதனால் வாழ்ந்து எங்கு அழிகின்றனவோ அதை அறிவாயாக; அதுவே ப்ரஹ்மம்' என்ற ஶ்ருதி வாக்கியத்தால் விளக்கப்பெற்ற ப்ரஹ்மமானது ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசங்களைச் செய்கின்ற மும்மூர்த்திகளாக வேறுபடினும், சிவன் விஷ்ணு முதலிய பேதங்களிலே

ஆக்ரஹம் தேவையில்லை; ஸ்ரீ ராம கிருஷ்ணாதி மூர்த்திகளுக்குள்ளும் தக்ஷிணாமூர்த்தி நடராஜாதி மூர்த்திகளுக் குள்ளும் எவ்வாறு பேதம் கற்பிக்கப்படுவதில்லையோ, அவ்வாறே ஹரிஹர பேதமும் அத்வைத சித்தாந்தத்தில் இல்லை. 'ஶாந்தம் ஶிவமத்வைதம்' என்று மாண்டூக்ய ஶ்ருதியும், 'தத் விஷ்ணோ: பரமம்பதம்' என்று காடக ஶ்ருதியும், சிவவிஷ்ணு பேதமின்றி ப்ரஹ்மத்தைக் குறிப்பதும் எடுத்துக் காட்டாகின்றன. ஸ்ரீ ஆதி சங்கராசார்ய ஸ்வாமிகள் 'தஶ ஶ்லோகீ'யில் 'ஶிவ : கேவலோஹம்' என்று ஶிவோஹம் பாவனையையும் 'வாக்ய வ்ருத்தியில்' 'யஸ்ய ப்ரஸாதாதஹ மேவ விஷ்ணு:' என்ற தெளிவையும் கூறியிருப்பதால் சிவ விஷ்ணு ஸ்வரூப பேதம் இல்லை என்று விளங்குகின்றது. 'ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்ய'த்தில் பாசுபத மத விசாரத்தில் சிவாகமங்களிற் சொல்லப்பட்ட ஈசுவரனே முதற் காரண மென்றும் பாஞ்ச ராத்திர விசாரத்தில் வைஷ்ணவாகமங் களிற் சொல்லப்பட்ட நாராயணன் பரமாத்மாவே என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. 'ப்ரஶ்னோத்ர ரத்ன மாலிகை'யிலும் 'பகவான் யார்?' என்ற வினாவிற்கு 'சங்கரரும் நாராயணருமான மஹேசுவரரே' என்பது விடையாக வுள்ளது. ஸ்ரீ சங்கரபகவத் பாதர்கள் லோகஸங்க்ரஹத்தின்பொருட்டு உபாஸனை செய்யும்போது சந்த்ர மௌளீச்வராராதனையைச் செய்தும் சிவோபாஸனையை உபதேசித்தும் இருப்பினும், இரு மூர்த்திகளிலும் அபேத புத்தியே பாஷ்யத்திற் காணப்படுகின்றது. "இந்த அபேதம் பாரமார்த்திகத்திலே மட்டும் அன்று, வியவஹாரத்திலும் அபேதமே ; ஜீவேஶ்வரர்களுக்கோ வியவஹாரத்திற் பேதம், பாரமார்த்திகத்தில் அபேதம்" என்பதே பரமாசார்யர்களின் கருத்து.

நான்கு வேதங்களில் ஒவ்வொன்றும் இரு வகையாக அமைந்துள்ளது. லோக க்ஷேமம் நிலை பெறுவதற்காக லோக ரக்ஷணத்தைச் செய்யுந் தேவதைகளை யாகங்களால்

வழிபடுவதற்கான கட்டளைகளைக் கொண்டது கர்ம காண்டம்; நிஷ்காமனாய், யாகங்களைச் செய்து சித்த சுத்தி பெற்று, ஈசுவரோபாஸனையால் பகவத் கிருபையைப் பெற்று, சிரவண மனன தியானங்களால் பேதம் அகலவே, பரிபூர்ணாத்வைத தத்த்வ ஸாக்ஷாத்காரத்தைத் தருவதற் கமைந்தது ஞானகாண்டம். 'இதிலே அத்வைதம் சொல்லப்படுவது ஸஹஜமே; கர்ம காண்டத்திலும் அத்வைதம் ஆங்காங்கு மிளிர்கின்றது' என்பதை ரிக்வேதத்தில் ஞானகாண்டத்திலுள்ள அத்வைத மஹாவாக்யத்தாலும் 'ஶ்ருதஸ்லோகீ'யில் எடுத்துக் காட்டப் பெற்ற 'ரிக்'களாலும் வேறு சில 'ரிக்'களாலும் விளக்குவது ஒரு வியாசம்; கிருஷ்ண யஜுர்வேதத்து நூற்றொன்று சாகைகளுள் தென்னாட்டிலே அதிகமாக வழங்கும் தைத்திரீய சாகையைச் சார்ந்த உபநிஷத்துகளிலும் கர்ம காண்டத்திலு முள்ள அத்வைத பரமான வாக்கியங்களை ஒரு வியாசமும், சுக்லயஜுர் வேதத்திலுள்ள பதினைந்து சாகைகளிலும் அத்வைதக் கருத்துகள் அதிகமா யுள்ளன என்பதை நிரூபித்து, ஆதி ஆசார்யர்கள் அருளிச் செய்த பாஷ்யத்தை அனுசரித்து ப்ருஹதாரண்யகோபநிஷத்திலும் ஸம்ஹிதோபநிஷத்திலுமுள்ளவையான (1) ஜீவப்ரஹ்மாபேதம் (2) ஞானத்தாலேதான் மோக்ஷம் (3) ஜீவன் முக்தி முதலிய அத்வைதக் கருத்துகளை விளக்கும் ஒரு வியாசமும் அமைந்துள்ளன. ஆயிரஞ் சாகைகளை யுடைய ஸாமவேதத்திலே தென்னாட்டிலே அதிகப் பிரசாரமுள்ள கௌதும சாகையின் மந்த்ர பாகத்திலும் ப்ராஹ்மண பாகத்திலுமுள்ள அத்வைத வாக்கியங்களைக் காட்டுவது மற்றொரு வியாசம்; சாந்தோக்யோபநிஷத்திலே உத்தாலக மஹர்ஷி "உருவம் என்பது வெறும்பெயர் தான்; மண் ஒன்றே உண்மை" என்று தம் மகனுக்கு உபதேசிப்பதும், 'தத்த்வமஸி' என்னும் மஹா வாக்யம் இவ் வுபநிஷத்திலேதான் உள்ளது என்பதும், பரம்பொருளை 'நான்' என்று குறிக்கப்

படும் பொருளாகக் கூறி ஜீவேச்வராபேதத்தை ஸாம விதானம் குறிப்பிடுவதும் இக் கட்டுரையிலே விவரிக்கப்படு கின்றன. அதர்வண வேதத்தைச் சார்ந்தவை 'ப்ரஸ்னம்', 'முண்டகம்' 'மாண்டூக்யம்' என்ற மூன்று முக்கியமான உப நிஷத்துகளும்; அவைகளில் நிரம்பியுள்ள அத்வைதக் கருத்துகள் எல்லோரும் அறிந்தவையே. இந்தவேதத்துக் கர்ம காண்டத்திலுள்ள அத்வைத வாக்கியங்களிற் சில அடுத்துள்ள வியாசத்தில் உதாஹரிக்கப் பெறுகின்றன. 'ப்ரஹ்மமே ஹோதா, ப்ரஹ்மமே யாகம், ப்ரஹ்மமே ஹவிஸ், ப்ரஹ்மமே யஜ்ஞத்தின் தத்த்வம்' என்றும் 'நீயே ஸ்திரீ, நீயே புருஷன், நீயே குமாரன், நீயே குமாரி, நீயே பிறந்து (மூத்து) கோல் பிடித்து நடக்கின்றாய்; நாநாவித மாய் பிறப்பதும் நீயே" என்றுமுள்ள வாக்கியங்கள் விமர் சிக்கப் படுகின்றன.

மனு முதலியவர்களின் ஸ்ம்ருதிகளிலும் அத்வைத ஞானம் சிறப்பிக்கப் பெற்றுள்ளது; மனு ஸ்ம்ருதியின் தொடக்கமும் முடிவும் அத்வைதபரமா யமைந்துள்ளன. "எல்லா தர்மங்களும் அத்வைத ஞானத்தில் முடிவு பெறு கின்றன; ஆத்மஞானமே ஸர்வப் பிரயாச்சித்தமும் பரம பாவனமுமாகும்; ஸகல பூதங்களிலுமுள்ள ஆத்மா ஒன்றே; ஞானமே மோக்ஷ ஸாதனம்" என்று கூறப்பட் டுள்ளது. யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியும் க்ஷேத்ரஜ்ஞனை ஜீவனை ஈசுவரனாகக் கூறுகின்றது. அதன் உரையாக அமைந்த 'மிதாக்ஷர'மும் கடாகாசம்போலவும் பல நீர் நிலைகளிலே தோன்றும் சூர்ய பிம்பங்கள் போலவும் ஆத்மா உபாதிகளால் வெவ்வேறாகவும் பலவாகவும் தோன்றுகின் றது என்று விளக்குகின்றது. விஷ்ணு ஸம்ஹிதையோ ஜீவ பரர்களின் அபேதத்தைக் கூறி, 'ஆத்மா நிர்க்குணம், நிரா காரம்; ஈச்வரபாவமே மோக்ஷம்' என்று விளக்கி நிர்க் குணோபாஸனை கைகூடாதவர்க்கு ஸகுணோபாஸனையை

விதிக்கின்றது. தக்ஷ ஸ்ம்ருதியும் ஆத்மாவைத் தவிர வேறொன்று இல்லை என்று எவன் காண்கிறானோ அவன் ப்ர ஹ்மமேயாகிறான் என்று கூறுகின்றது; இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி ஸ்மிருதிகளுக்கும் அத்வைதமே தாத்பர் யம் என்று ஒரு வியாசம் நிர்ணயிக்கின்றது.

எல்லா ஆஸ்திக தர்சனங்களிலும் பௌத்த ஜைன தர்சனங்களிலுங்கூட அத்வைதக் கருத்துக்கள் மிளிர்கின் றன என்று எடுத்துக் காட்டுவதாய், ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்திலேயுள்ள "அனங்ஹோ' ஶப்தோ' ஶரீரோ ஸ்பர்ஶஶ்ச மஹான்ஶுசி:" முதலான வசனங்களையும் தர்ம சாஸ்திரங்களிலும் ஸூத்ரங்களிலுமுள்ள யதிதர்ம ப்ரகர ணங்களிற் கூறப்பட்ட ஜீவன்முக்தனுடைய லக்ஷணங்களை யும், யோகவாஸிஷ்ட ராமாயணத்திலும் விஷ்ணு புராணத் திலும் அத்வைதக் கருத்துகள் பல இடங்களிலுள்ளதையும், வாயு புராணத்தில் பழுதையிற் பாம்பு போலவும் கானலில் நீர்போலவும் ஆகாயத்தில் நீல நிறம்போலவும் ஜகத் அஸத் தும் அஜ்ஞான கல்பிதமும் என்றும் கடத்திலுள்ள ஆகாயம் போன்றது ஜீவன் என்றும் உள்ளதையும், ஸ்ரீ தேவீ பாக வதத்தில் மாயை ப்ரஹ்மத்தின் சக்தி யென்றுள்ளதையும், ஸாங்க்யம், யோகம், பூர்வ மீமாம்ஸை முதலிய சாஸ்திர நூல்களிலும் அத்வைதம் ஆக்ஷேபிக்கப்படாது கூறப்பட் டுள்ளதையும், வியாகரணத்தில் 'வாக்யபதீயம்' என்னும் நூலை இயற்றிய பர்த்ருஹரியும் அத்வைத தத்துவத்தையே பிரதிபாதிப்பதையும், வேத பாஷ்யஞ்செய்த ஸ்கந்தஸ்வாமி யும் அத்வைதக் கருத்தை வெளியிட்டிருப்பதையும் அடுத்து வரும் வியாசம் விளக்குகின்றது. அதுவே, 'ஸூத்ர க்ருதாங்கம்', 'ஸ்தாநாங்க ஸூத்ரம்', 'வேதவாத த்வாத் ரிம்ஶிகா', தத்த்வார்(த்)த ஸித்தி', 'ஆப்த மீமாம்ஸா,' 'லங்காவதார ஸூத்ரம்', 'புத்த சரிதம்', 'லலித விஸ்தா ரம்', 'சது: ஶதகம்' முதலிய நூல்களினின்றும் அத்

வைத தர்சனமே வைதிக தர்சனமாகப் பிராசீனர்களாற் கொள்ளப்பட்டது என்பதையும் நிரூபிக்கின்றது.

அத்வைதாசார்யர்களுள் மும்மணிகளாக விளங்கியவர்கள் ஸ்ரீவாசஸ்பதி மிச்ரரும் ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகளும் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரவர்களும். முன்னவர் நியாயம் ஸாங்க்யம் யோகம் உபயமீமாம்ஸைகள் ஆகிய தர்சனங்களிலும்வல்லவர். இடையிலுள்ளவர் ஸகலவேத சாகைகளுக்கும் உரைகண்ட பெரியார்; வியாகரணம் பூர்வமீமாம்ஸை தர்மசாஸ்திரம் இவற்றிலும் வல்லவர்; 'ஸர்வதர்சன ஸங்க்ரஹம்' என்னும் அரிய நூலை இயற்றியவர். பின்னவரோ, மத்வ ராமானுஜ ஸ்ரீகண்ட சங்கரபகவத்பாத தர்சனங்கள் ஆகிய நான்கிலுமுள்ள பரஸ்பர விரோதங்களைப் பரிஹரித்துஅவையெல்லாம் அத்வைதத்திலே முற்றுப்பெறுகின்றன என்று விளக்கிய பெரியார். இம் மூவரும், தங்களுடைய அரிய ஞானசக்திகளை பிற தர்சனங்களிலுள்ளவர்களுக்கும் பயன்படுமாறு, உதாரசிந்தையோடு வழங்கியிருப்பனதை எடுத்துக்காட்டுகின்றது மற்றொரு வியாசம். 'நியாய சாஸ்திரமும் அத்வைதமும்' என்னும் வியாசத்தில் நியாய வைசேஷிக சாஸ்திரங்களை உரைத்த ஆசார்யர்களுக்கு அத்வைதமே பரம தாத்பர்யம் என்றும் அவர் கூறியவையெல்லாம் மந்தாதிகாரிகளின் நன்மையை உத்தேசித்தே என்றும், அதற்கு உதாரணமாக ஆகாசம் என்னும் பூதமும் சிரவணேந்திரியமும் ஒன்றுதான் என்னும் கொள்கையைக் கொண்டே அத்வைதத்தை ஸ்தாபிக்கலாம் என்றும், உதயனாசார்யர் அத்வைத ஸாக்ஷாத்கார மேற்படாத வரையில் பிரபஞ்சம் ஸத்யமே என்று அத்வைதத்தை ஒப்புக்கொண்டு பௌத்தனையே நிரஸிக்கிறார் என்றும் விளக்கப்பட்டுள்ளது. வியாகரணத்திலேயும் நிர்க்குண ப்ரஹ்மமும் ஹரிஹராபேதமும் காணப்படுகின்றது என்றும் வேதாந்தத்திற்கும் வியாகரணத்திற்கும் 'ப்ரஹ்ம' என்றும் 'ஸ்போட' என்றும்

நாமமாத்திரையிலே தான் விவாதம் என்றும் அடுத்துள்ள வியாசம் கூறுகின்றது. மும்முனிகளுள் முதல்வரான பாணினியும் 'மூவகைப் பரிச்சேதமுமில்லாத ப்ரஹ்மத்தைக் குறிக்கும் 'வ்ருத்தி' என்னும் சொல்லை உபயோகித்து மங்களமாகத் தொடங்கி அத்வைதக் கொள்கையையே விளக்கினார் என்றும், இரண்டாமவரான வரருசியும் தமது வார்த்திகத்தில் ஆத்மாத்வைதத்தையும் ஏகத்வத்தையும் உண்மைப் பொருள் நித்யமாகவுள்ளதால் சாஸ்திரம் 'நேதிநேதி' என்று பிரமையைப் போக்குவதிலேயே பயன்படுகிறது என்ற அத்வைதக் கொள்கையையும் கொண்டு வியாகரண சாஸ்திரத்தின் பயனும் அதுபோன்றதே என்று நிரூபணஞ் செய்கிறார் என்றும், பதஞ்ஜலி பகவானும் 'அஸத் என்பது கானல் நீரும் கந்தர்வ நகரமும் போன்றது' என்றும் ஆத்மாவிலே எல்லாம் அத்யாஸம் என்றும் கூறியுள்ளதையும் நிகழ்காலம் என்பது இல்லை என்னும் ஐயத்தைத் தீர்க்கும் போது அத்வைதக் கொள்கைகளைக் கௌரவத்துடன் ஏற்றுக் கொள்வதையும் வேறு பல காரணங்களையும் காட்டி, இலக்கணஞ் செய்த மும்மணிகளும் எல்லாப் பொருளிலும் ப்ரஹ்ம புத்தி பண்ணுகிறார்கள் என்று முடிவு செய்கின்றது. வேதத்தின் உட்பொருளை அறிவதற்கான நியாயங்களைக்கூறும் மீமாம்ஸா சாஸ்திரத்தில், ஜீவஸ்வரூபம் நிர்ணயிக்கப்பட வேண்டும். கர்த்தா, போக்தா என்று அகங்கார மமகாரங்களுடன் இருப்பது ஜீவன் என்றும், 'ஆனால் இது தத்வம்அன்று; உண்மையை வேதாந்தத்தால் அறிக' என்றும் மீமாம்ஸகர் கூறியுள்ளதையும் பிரபாகரர் 'அகங்கார மமகாரங்கள் ஆத்மாவினிடத்து அனாத்ம தர்மங்களின் தோற்றமே' என்று ஸம்வதித்திருப்பதையும் காட்டி, மீமாம்ஸகர்களுக்கும் அத்வைதமே பரமதாத்பர்யம் என்று நிரூபிக்கின்றது வேறொரு வியாசம். இன்னொரு வியாசம் ஸாங்க்ய யோக சாஸ்திரங்கள் முறையே பரிபூர்ண ஞானத்

தை விளக்கிக் காட்டியும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்திற்கு அடிகோலியும் அத்வைதத்திற்கு அனுகுணமா யிருப்பவையாகையால் இவைகளிலே அத்வைதக் கருத்துகள் மிகுந்திருக்கின்றன என்று குறிப்பிடுகின்றது. ப்ரஹ்ம ஸூத்ரமென்றும் சாரீரக மீமாம்ஸை என்றும் பெயரினாலேயே ப்ரஹ்ம ஜீவைக்யத்தைக் காட்டும் உத்தர மீமாம்ஸா ஸூத்ரங்களுக்குப் பலர் பலவாறு உரை கூறியபோதிலும், ஸூத்ரகாரருக்கு அத்வைதமே கருத்து என்பதை விளக்கிக் காட்டுவது வேறொரு வியாசம். ஜீவனுக்குப் பிரபஞ்ச ஸம்பந்தம் நீங்கி ஸ்வரூபாவிர்பாவ மாவதும், அஜ்ஞானத்தால் இடையிட்ட திரோபாவம் விலகுவதுமே மோக்ஷம் என்றும் மோக்ஷ தசையில் தன்னைச் சேர்ந்தது என்று ஒன்றுமேயில்லை என்றும் பரமாத்மாவை ஒன்றாகக் கண்டு ஒன்றுவதே மோக்ஷம் என்றும் ஸச்சிதானந்த ஸ்வரூபமான ப்ரஹ்மமாவதே மோக்ஷமாயினும் பத்த புருஷ த்ருஷ்டியில் ப்ரஹ்மம் ஸவிசேஷ ரூபமாகத் தோன்றும் என்றும், ப்ரஹ்மத்தை அறிந்தால் எல்லாம் அறிந்தவனாகிறான் என்பதால் ஸ்வப்னம் போல் மாயிகமான பிரபஞ்சம் வியவஹார நிலையில் உண்மையாகத் தோன்றினாலும் காரணமாகிய ப்ரஹ்மத்தைத் தவிர வேறு அன்று என்பது விளங்குகின்றது என்றும், ப்ரஹ்மம் ஒன்றே ஸத், வேறாகத் தோற்றுவது எல்லாம் அஸத் என்றும், நிர்விகாரமான ப்ரஹ்ம சைதன்யத்தில், ஸ்வப்னத்திலே போல, ப்ரபஞ்சம் தோன்றுவதால் ப்ரஹ்மம் பரிணாமோபாதானமன்று, விவர்த்தோபாதானமே என்றும் தியான விஷயம் பொய்யாகலாமாதலாலும் ஞான விஷயம் மெய்யே ஆதலாலும் நிர்குணமே வாஸ்தவம் என்றும் ப்ரஹ்மத்திற்கு ஸவிசேஷ ரூபமும் ஜீவனுக்குக் கர்த்ருத்வமும் ஔபாதிகம் என்றும் உபாஸகனுக்கே லோகாந்தர கதியும் கிரம முக்தியும் ஞானிக்கு இங்கேயே முக்தியென்றும் ஸூத்ரக் கருத்துகள் அனைத்தும் அத்வைதத்

தையே மெய்ப்பிக்கின்றன என்று இதில் விளக்கப்படுகிறது. இவ்வாறு ஆறு தர்சனங்களிலும் அத்வைதமே தாத்பர்யம் என்று விளக்கப்பெற்றுள்ளது. உபநிஷத்துகளின் ஸாரமாய் விளங்கும் ஸ்ரீ பகவத்கீதையோ அத்வைதாம்ருத வர்ஷிணீ என்று பிரசித்தி பெற்றது; காரணம் என்னவென்ருல், ஆதி முதல் அந்தம்வரை, அதில் ஞானத்தாலேதான் மோக்ஷம் என்றும் ஸோஹம்பாவனையாகிய அனன்யபக்தியும் அபேத சரணுகதியும் மோக்ஷ ஸாதனங்கள் என்றும் அஜ்ஞானமாகிய மாயையால் உண்மை மறைந்து பிரபஞ்சமாகத்தோற்று கிறது என்றும் 'ஆத்மாவே ஸத், நித்யப்பொருள், எல்லாவற்றிலும் ஒன்றேயாகவுள்ளது, அது கர்த்ருத்வம் முதலியவை இல்லாத நிர்விகாரப்பொருள், அதிற் பிரபஞ்சம் கற்பிதம். காரணப்பொருளைத் தவிரக் காரியப்பொருள் இல்லை. ஜீவேசுவர பேதம் உண்மையில் இல்லை' என்றும் கூறி, 'உள்ளது ஒன்றேதான் என்னும் ஸாத்விக அறிவுகொண்டு ஸர்வகர்ம ஸம்ந்யாஸத்தால் ஜீவன்முக்தி' என்பதால் ஸ்ரீ கீதையின் உட்பொருளும் அத்வைதமே என்று முடிவுகட்டுகின்றது ஒரு வியாசம்; மற்ருென்றிலே, பகவான் உபதேசத் தொடக்கத்திலேயே ஞானி துன்புறுதலில்லை என்று ஞானத்தால் மோக்ஷம் என்றும் ஸத் அல்லாத தேஹாதிகளுக்கு இருப்பு என்பதில்லை யென்றும் ஸத்தான ஆத்ம வஸ்துவிற்கு இன்மையில்லை யென்றும் பிரபஞ்சம் ப்ரஹ்மத்தினிடம் இல்லை என்றும் 'ஸர்வசரீரங்களிலுமுள்ள க்ஷேத்ரஜ்ஞன் நான் ஒருவனே' என்றும், ப்ரஹ்ம ஸத்யம், ஜகத் மித்யை, ஜீவேச்வராபேதம் முதலிய அத்வைதக் கருத்துகள் விளக்கப்படுகின்றன. மாயையின் ஸ்வரூபத்தையும், ஈச்வரோபாஸனையால் அஞ்ஜானம் நீங்கப் பெற்ருல் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை யடையலாம் என்பதையும், அப்போது ஜீவன் ப்ரஹ்மமேயாகிருன் என்பதையும் விளக்கும் ஸ்ரீகீதைப்பகுதிகள் விமர்சிக்கப்பெற்றுள்ளன. "வேதாந்

திகள் என்று பிரசித்திபெற்ற அத்வைதிகள் பிரச்சன்ன பௌத்தர்கள் அல்லர்; பௌத்தர்களே பிரச்சன்ன வேதாந்திகள்" என்னும் உண்மையை நிரூபணஞ்செய்வது அடுத்த கட்டுரை; வைதிகமதம் அநாதியாகையால் காலாந்தரங்களிலே தொடங்கப்பெற்ற பௌத்த ஜைன மதங்கள் வேத வேதாந்தக் கருத்துக்களை அபகரித்துக்கொண்டு அவற்றை வேற்றுருவத்திலே அமைத்துக் கையாளுகின்றன என்றும் மஹேந்திர பல்லவன் இயற்றிய 'மத்த விலாஸ ப்ரஹஸன' நாடகத்திலே,வேதவேதாந்தங்களையே தனமாகக்கொண்ட அந்தணர்களின் கண் முன்பேயே வேதாந்த விழுப்பொருட்களையும் ஐந்தாவது வேதமாகிய மஹாபாரதப் பொருளையும் அபஹரித்துத் தம் பொக்கிஷத்திலே நிரப்பிக்கொண்டாரென்று புத்தரைப்பரிகசித்திருப்பதை எடுத்துக்காட்டி, ஜைனர்களும் அர்ஹன் என்று வேதத்திலே கூறப்பட்ட சிவபிரானையே அருகக்கடவுளாக்கிக்கொண்டார்கள் என்பதற்கு அறநெறிச்சாரம் என்னும் நூலின் இறுதிப் பாடலையும் மேற்கோளாகக் காட்டி, உதயனாசார்யர் தம் காலத்தில் வைதிக மதத்திலுள்ளவர்களிற் சிலர் பௌத்தம் முதலிய மதங்களிலே சேர்ந்துகொண்டதற்குக் காரணங்களைக் குறிப்பிட்டிருப்பதையும் விளக்கி, அத்வைதமே அநாதியாய் வந்த வேதாந்த சித்தாந்தம் என்று காட்டுகின்றது வேறொரு கட்டுரை.

மாண்டூக்யோபநிஷத்தை விவரித்துக் கூறும் மாண்டூக்ய காரிகைகளும் அத்வைத வுண்மையைத்தான் ஸ்தாபிக்கின்றன என்றும் ஸ்வப்னம் போன்று பிரபஞ்சமும் மித்யை என்றும் அதன் அதிஷ்டானமாகிய ஆத்மஸ்வரூபமே ஸத்யமென்றும் பொய்யான த்வைதமும் அதைக்கூறும் த்வைதிகளும் அத்வைதத்தைப் பாதிக்கமுடியாதுஎன்றும் ஸத்தான கார்யம் உண்டாகின்றது என்னும் ஸாங்க்யர்களும், அஸத்தான கார்யம் உண்டாகின்றது என்னும் தார்க்கிகர்களும்,

'இரண்டு விதமாகவும் கார்யம் உண்டாவதில்லை; இது அநிர்வசனீயம்; காரிய காரண பாவமே மாயிகம்; அஜாத வாதமே வாஸ்தவம்" என்னும் அத்வைதக் கருத்திலேதான் ஒன்றுபட வேண்டும் என்றும் இக் காரிகைகளை விமர்சனஞ் செய்து முடிவு கட்டுகின்றது மற்றொரு கட்டுரை.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் அருளிச்செய்த பாஷ்யங்களின் காம்பீர்யத்தை எடுத்துக் காட்டுவது ஒரு கட்டுரை. முதலில் ஶ்ருதி வாக்கியத்தையும் அடுத்ததாக ஸ்ம்ருதி வசனங்களையும் எடுத்துக் காட்டியே தம்முடைய ஸ்வ மேதையாலே பொருள் விளக்கங் கூறுவது இப்பாஷ்யங்களின் ரீதி என்றும் உட்கருத்துடையதாய் ஆழமும் தெளிவுமுடையதாய் கங்காப் பிரவாஹம் போன்று பகவத் பாதர்களுடைய முகாம்புஜத்தினின்று பெருகும் தேன் மொழியானது அத்வைத ஞானத்தைத் தந்து மறு பிறப்பை ஒழித்துவிடுகின்றது என்றும் வேறு மதங்களைக் கண்டிக்க வேண்டுமென்ற ஆசையாற் கண்டிப்பதில்லை, உண்மையை விளக்குவதற்கு அவசியமான இடங்களில் மட்டுமே கண்டிப்பதுண்டு என்றும் அநேக இடங்களில் ஒன்றுக்கொன்று விரோதமான மதக் கருத்துக்களைக் கொண்டு இருவகைக் கருத்துகளையும் பரிகரிக்கிறார் என்றும் காட்டப்படுகின்றது. உபநிஷத்களுக்கு உரை கூறும்போது தம்முடைய மதத்திற்கு மாறுபட்ட மதங்களைக் கூறும் பூர்வாசார்யர்களை இவர்கள் 'நம்மவருட் சிலர்' என்று ஆதரத்தோடு கூறுவதும் இதர உரைகாரர்களுள் காணப்படாத தொன்று என்று போற்றப்படுகின்றது. அத்வைத தர்சனம் புதிதாகத் தொடங்கப் பெற்ற தன்று; 'குருமுகமாக வந்த வித்தையே' என்பது வேதவாக்கு. ஸ்ரீ ஆதி ஆசார்யர்கள் ஸரஸ்வதீ தேவியை ஜயித்தும் ஸர்வஜ்ஞ பீடாரோஹணஞ் செய்தும் பரம சிவாவதாரமென்று கொண்டாடப் பெற்ற போதிலும் தாம் அருளிச் செய்த ஞான நூல்களில், "எல்லாம் தம் குரு மூர்த்தி

களின் அருள்" என்றும் தம்முடைய அறிவெல்லாம் பரம்பரையாகக் குரு சிஷ்யக் கிரமமாக வந்ததுதான் என்றும் விளக்குகிறார்கள். "லோக ஸ்ருஷ்டி தொடங்கி ஞானகுரு பரம்பரையைப் பரிபாலித்து வரும் ரிஷிகளுக்கும் ஆசார்யர்களுக்கும் இவ் வணக்கம்" என்று பாஷ்யத்தில் திருவாய் மலர்ந்தருளி "ஆசார்யர்களின் பிரஸாதத்தால் இப் பாஷ்யம் செய்கிறேன்" என்றும் கூறியுள்ளார்கள். இவர்களுக்குக் குரு கோவிந்த பகவத் பாதர்கள், அவர்களுக்குக் குரு கௌடபாதர்கள், அவர்களுக்கு உபதேசஞ் செய்தருளினது சுகப்பிரும்மம், சுகரைப்பெற்றெடுத்தவர் வியாச பகவான்; இவ்வாறு வந்த பரம்பரையைத் தவிர, த்ரமிடாசார்யர், ப்ரஹ்மானந்தி, ஆசார்ய ஸுந்தர பாண்டியர் இவர்களுடைய அத்வைத நூல்களிலிருந்தும் ஆசார்யர்கள் ஆங்காங்கு மேற்கோள் காட்டியுள்ளார்கள். ஸன்னியாசிகள் ஆண்டுதோறும் நடத்தும் வியாஸ பூஜையில் இந்த ஞானசார்யர்கள் அனைவரும் தனித் தனியாகப் பூஜிக்கப்படுகிறார்கள்; இதிலே கௌட பாதாசார்யர்களுக்கு முந்திய ஸ்தானம் த்ரமிடாசார்யருடையது. ஸ்ரீ பகவத் பாதர்கள், அடிக்கடி தமது பாஷ்யங்களிலே "குரு பரம்பரையாக வந்த வித்தையை குருமுகத்தால் அப்யஸித்தால் மட்டுமே மோக்ஷமுண்டு, ஸர்வ சாஸ்திரங்களையும் அறிந்த மேதாவியும் குருபரம்பரையாக வந்த வித்தையைக் குரு கிருபையாற் பெறுவிட்டால் அவன் கல்வியெல்லாம் பாழே" என்று அறுதியிடுகிறார்கள்; இவற்றை யெல்லாம் விளக்கி 'அத்வைதம் பரம்பரா ப்ராப்தமான அனுதி ஸித்தாந்தம்' என்று காட்டுகின்றது ஒரு வியாசம்.

ஸ்ரீ பகவத் பாதர்கள் விளக்கிய அத்வைத தர்சனம் மிகப் பிராசீனமானது என்றும் இதனை ரிஷிகள் கண்ட ஆஸ்திக மதங்கள் அனைத்தோடும் கேவல பௌத்த மதத்தோடும் நாஸ்திக மதத்தோடும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும்

இக் கட்டுரைகள் கூறுகின்றன என்றும் ராமானுஜசார்யர், மத்வாசார்யர், வல்லபாசார்யர், சைவாசார்யர்கள் முதலியவர் அனைவரும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களைப் பின்பற்றுவதைப் போலத் தம்மோடு மாறுபட்ட வேறு மதாசார்யர்களைப் பின்பற்றுவதில்லை என்பதினின்றுமே சங்கராசார்யர்களின் பெருமை நன்கு துலங்குகின்றது என்றும், அந்தந்த க்ஷேத்ர மஹிமையையும் தீர்த்த மஹிமையையும் கூறும் போது, காசியையும் கங்கையையும் போன்ற பெருமையுடையது என்றுரைப்பதைப் போன்றுள்ளது இது என்றும் 'பெரியோரோடு பகைத்தலும் நன்றே' என்னும் நியாயப்படி,நாஸ்திகர்களும், ஆஸ்திகர்களும்,த்வைதிகளும், ஜடப் பொருளையும் ஸத்ய மென்பவர்களும், 'அதிஷ்டானப் பொருளேஇல்லை; உண்டு என்பது பிரமமே' என்பவர்களும், பரம்பொருள் என்பதே இல்லை என்பவர்களும் ஆகிய எல்லோரும் ஒரே நோக்கத்தோடு ஊன்றிச் சிந்தனை செய்கின்றதனாலேயே, பரம்பொருள் ஒன்றே உண்மைப் பொருள் என்று (இளம் பிள்ளைகளால் சூர்யன் விளக்கப்படுவது போல) விளக்கப்பெற்ற தனி ஞானப் பொருள் பரம மங்களத்தைத் தருவதாகுக என்ற ஸ்வஸ்த்யயனத்தோடு இந்த முதற் பிரிவு முடிவு பெறுகின்றது.

சிவாகமங்கள் பலவற்றிலும் சிவஞானிகள் இயற்றிய நூல்களிலும் அத்வைதமே பரமதாத்பர்யமாக அமைந்துள்ளது என்பதை (1) ஆகமங்களுட் சிறந்ததாகக் கொள்ளப்படும் ஸர்வ ஞானோத்தரத்தில் 'இன்று சிவமாயிராதது முக்தியிற் சிவமாகாது ஆதலால் முக்காலத்திலும் ஜீவன் சிவமே' என்றுள்ளதைக் காட்டியும்(2) துவக்கத்தில் பூஜைக்குரிய த்வைதோபாஸனையையும் பின்பு தியானத்திற்கு அனுகுணமான பேதாபேத மார்க்கத்தையும் படிப்படியாகக்கூறி உத்தமாதிகாரிகளுக்கு ஸோஹம்பாவனையை உபதேசிக்கும் ஆகமங்களின் முறையை விளக்கியும். (3) சிவஞான

பாடியமியற்றிய ஸ்ரீமாதவ சிவஞானியோகிகள் 'ஏனைய ஆக மங்களுக்குப் பொருள் காணும்போது இந்த ஸர்வஞானோத் தரத்திற்குப் பொருந்தக் கூறவேண்டும்' என்பதை வற்புறுத் துபவராய் ஆறும் ஸூத்ரத்திற்கு உரையாக இவ்வாகமத் தின் ஸாரத்தைக் கூறியுள்ளதைக் காட்டியும் (4) சுப்ரபேதா கமத்திலே நீரோடு நீர் கலந்தாற்போலவும் பாலோடு பால் கலந்தாற்போலவும் ஆத்மா பரமாத்மாவோடு கலக்கின்றது என்று கூறப்பட்டிருந்ததை எடுத்துக்காட்டியும்(5)ரௌரவா கமத்திலுள்ள சிவ ஞானபோதத்து எட்டாம் ஸூத்ரத் திலே 'தன்னை வேட்டுவனுகக் கருதிய அரசகுமாரனைப் போன்றது ஜீவன்' என்றுள்ள உபமானத்தை ப்ருஹதாரண் யகத்திற்கு ஸ்ரீபகவத் பாதர்கள் செய்தருளிய பாஷ்யத்தில் காணப்படுவதோடு ஒப்பிட்டும் (6) ஸ்ரீகண்டர் செய்தரு ளிய சிவ விசிஷ்டாத்வைத பாஷ்யத்திற்கு ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் செய்தருளிய உரையின் தொடக்கத்திலே, 'அத் வைத தத்வமே வேதவேதாந்தங்களின் கருத்தாயிருக்க, விசிஷ்டாத்வைத பாஷ்யத்திற்கு உரை இயற்றுவதேன் என் றால், சிவ கிருபையாலேயே எவனுக்கும் அத்வைதத்தில் வாசனை ஏற்படுமாதலால் சிவோபாஸனைக்கு உபகரிக்கும் சிவ விசிஷ்டாத்வைத பாஷ்யத்திற்கு உரை கூறுகிறேன் என்று சொல்வதைக் காட்டியும், சிவாகமங்களுக்கும் சைவப் பெரியார் பலருக்கும் அத்வைதத்திலேயே கருத்து என் பதை இரண்டாம் பிரிவிலுள்ள முதல் வியாசம் விளக்கு கின்றது.

ஞானம் ஐந்துவிதம் என்றும் முக்தி மூவகைப்படும் என்றும் கூறும் பாஞ்சராத்ராகமங்களிலும் அத்வைதம் விவரிக்கப்படுகின்றது என்றும் ஸோஹம்பாவனையால் சித்திக்கும் அத்யந்த ஐக்யம் அபேத முக்தி என்று பாத்ம ஸம்ஹிதை கூறும் என்றும் 'ஒரே பரம்பொருள் எல்லாச் சரீரங்களிலும் உள்ளது; அதன் பிரதிபிம்பமே ஜீவன்;

ஜீவனே சுகதுக்கங்களை அனுபவிப்பவன்; ஞானம் வந்த பிறகு சூர்யனிடத்துப் பிரதிபிம்பம் லயிப்பதுபோல ஜீவன் லயத்தை யடைகிறான் என்று நாரதஸம்ஹிதை கூறும் என்றும் அடுத்த வியாசத்திலே சொல்லப்படுகின்றது.

வைகானஸாகமங்களிலும் ஸூத்ரங்களிலும் அத்வைதக் கருத்து பரவி நிற்கிறது என்பது காச்யப ஸம்ஹிதையிலேயுள்ள 'ஸமஸ்த ப்ரபஞ்சமும் ப்ரஹ்மமே; அதைவிட ப்ரபஞ்சம் வேறு இல்லை' என்ற வாக்கியத்தைக் கொண்டும், வைகானஸ க்ருஹ்ய ஸூத்ரத்தில், நிவிருத்தி என்பது 'லோகம் அநித்யம்; பரமாத்மாவைத் தவிர வேறு இல்லை' என்று உணர்ந்து ஜீவபரர்களின் ஐக்கியத்தை ஸாக்ஷாத்கரித்து நித்யானந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்திற் புகுவது என்று கூறப்பட்டிருப்பதைக் கொண்டும், இவற்றிற்கு ந்ருஸிம்ஹவாஜபேயி கூறியுள்ள உரைகளாலும் ஜகத்மித்யை ஜீவபராபேதம், ஞானத்தாலேதான் மோக்ஷம், ஜீவன்முக்தி முதலிய அத்வைதக் கருத்துகள் காணப்படுகின்றன என்றும் விவரிப்பது வேறொரு வியாசம். மற்றொரு வியாசம் சாக்த தந்த்ர நூல்களிலும் அத்வைதக் கருத்துகள் காணப்படுகின்றன என்று நிரூபிக்கின்றது. கௌலோபநிஷத் வாக்கியங்களிலே ப்ரபஞ்சம் மித்யை என்றும் ஆத்ம ஞானத்தாலே தான் மோக்ஷம் என்றும் மோக்ஷம் என்பது ஸர்வாத்மாவாகிய நிலையைப் பெறுவதே என்றும் உள்ளதைக் காட்டியும் த்ரிபுரா மஹோபநிஷத்திலுள்ள "தேவியின் பிரஸாதத்தால், பரிச்சேதிக்கப்பட்ட நிலைநீங்கி ஜீவன் த்ரிமூர்த்திகளும் தானேயாகிறான்" என்னும் வாக்கியத்திலே ஞானத்தால் மனோலயமும் மோக்ஷமும் உண்டாகின்றன என்னும் கருத்து அமைந்திருப்பதையும் பாவனோபநிஷத் ஜீவன்முக்தியைக் கூறுவதையும் குலசூடாமணி தந்த்ரம் ஸ்ரீகாளீவியாஸ தந்த்ரம் குலார்ணவ தந்த்ரம் காமகலாவிலா

ஸம் முதலியவற்றிலும் இவ்வாறே பல அத்வைதக் கருத்து கள் அமைந்திருப்பதையும் விளங்குகின்றது. லலிதா ஸஹஸ்ர நாமம், விஷ்ணு ஸஹஸ்ர நாமம், சிவ ஸஹஸ்ர நாமம் ஆகிய மூன்றிலும் பல பெயர்கள் அத்வைதக் கருத்து களை உட்கொண்டுள்ளன என்பதை விளக்குகின்றன மூன்று வியாசங்கள்.

தேவிபாகவதத்திலும் 'பொய்யான பிரபஞ்சத்தை நீ எப்படி சிருஷ்டிக்கிறாய்' என்ற வினாவினாலும் 'எந்த தேவீ தத்வத்திலே பிரபஞ்சம் பழுதையிற் பாம்புபோலத் தோன்றுகிறதோ அந்த தேவிக்கு நமஸ்காரம்' என்பதாலும் 'நான் ஜகத்தைச் சிருஷ்டித்து அதனுட்புகுந்து உபாதி யாற் கடாகாசத்தைப் போல பேதத்தை யடைகிறேன்' என்னும் தேவியின் வாக்கினாலும் அத்வைதம் விளக்கப்படு கின்றதைக் காட்டுவது மற்றொரு வியாசம். பதினெட்டுப் புராணங்களுள் சிவ புராணங்கள் பத்து; அவற்றிலுள்ள அத்வைதபரமான வாக்கியங்களைத் தொகுத்து கூறும் கட்டுரையிலே, "ப்ரஹ்மம் என்னும் அத்வைதப் பொருளே மாயையாயும் ஜீவனாயும் ஜகத்தாயும் தோன்று கின்றது என்னும் ஸூத ஸம்ஹிதையும், கிளிஞ்சலில் வெள்ளி போல் பிரபஞ்சம் இவனிலே தோன்றும் என்னும் வாயுபுராண வசனமும் வேறு வாக்கியங்களும் உதாஹரிக் கப் படுகின்றன. விஷ்ணுபுராணத்திலிருந்து எத்தனையோ சுலோகங்களை யெடுத்துத் தமது பாஷ்யங்களிலே ஸ்ரீ பக வத் பாதர்கள் கையாண்டிருக்கிறார்கள். அதிலுள்ள ப்ரஹ் லாத வசனங்கள் ப்ருதிவீஸ்தவம் கேசித்வஜ காண்டிக்ய ஸம்வாதம் முதலிய பல இடங்களையும் காட்டி, அத்வைதத்தி லேயே பராசர முனிவரின் தாத்பர்யம் என்று ஒரு கட்டு ரையும் ஏனைய வைஷ்ணவ புராணங்களிலும் அத்வைதக் கருத்துக்கள் உள்ளன என்று வேறொரு கட்டுரையும் விளக் குகின்றன. 'ரஜ்ஜு-ஸர்ப்பம் முதலியவை போன்றதே

ஒரே ஆத்மாவின் ஆகாசம் முதலிய நானாரூபங்களும்' என்பது கருடபுராணம். 'ஜீவன் அனாதி அவித்யையால் ஜனன மரணங்களை யுடையவன் போலத் தோன்றுகிறான். அவித்யை நீங்கினால் இத்தோற்றமும் நீங்கி சுத்த ப்ரஹ்மமாய்ப் பிரகாசிக்கிறான்' என்பது நாரத புராணம்.

மஹாபாரதத்தில் அத்வைதபரமாயுள்ள வாக்கியங்களுக்கு உதாரணங்களை ஜனமேஜய வைசம்பாயன ஸம்வாதம், ப்ரஹ்ம ருத்ர ஸம்வாதம், பீஷ்ம ஸ்தவ ராஜம், மனு ப்ருஹஸ்பதி ஸம்வாதம், ஸுவர்ச்சலா சுவேதகேது ஸம்வாதம், பீஷ்மயுதிஷ்டிர ஸம்வாதம் முதலிய இடங்களினின்றும் எடுத்துக் காட்டுகின்றது ஒரு வியாசம். இம் மேற்கோள்கள் 'வியாச பகவான் புருஷைகத்வத்தையே எங்கும் கூறுகின்றார்' என்பதையும் மும்மூர்த்திகளின் ஐக்யத்தையும் ப்ரஹ்மம் நிர்குணம் என்பதையும் 'பரம்பொருள் ஜீவனைக் காட்டிலும் வேறுபடாததால், ஜீவன் பரம்பொருளைக் காட்டிலும் வேறுபட்டவனாகத் தன்னைக் கருதாமல் தன்னுள் பரமனைக் காணவேண்டும்' என்பதையும் மோக்ஷாத்மா என்று பகவானுக்குப் பெயர் இருப்பதையும் மண்ணைக் குடம் முதலிய பெயர்களையிட்டுக் கூறுவதே போன்று ஆத்மாவும் 'நான்' முதலிய பெயர்களாற் கூறப்படுகின்றது என்றாலும் ஆத்மா வாக்குகளுக்கு எட்டாது ஆகையால் இவ்வாறு பல பெயர்களை யிடுவதால் பாதகமில்லை என்பதையும் ஸ்வகர்மாவைக் கைவிட்டு ஞானத்தில் நிலையுற்றிருப்பவனுக்கே மோக்ஷம் என்பதையும் ஜீவன்முக்தியையும் விளக்குகின்றன. சிவரஹஸ்யம் என்னும் இதிஹாஸத்திலுள்ள ஞானகாண்டத்திலும் உபாஸனாகாண்டத்திலும் அத்வைதக் கருத்துகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்கின்றது அடுத்துள்ள வியாசம்.

அடுத்த வியாசத்தில் ஹரிலீலைகளாலும் கதைகளாலும் நல்லோர்களுக்கு அமுதமாயுள்ள ஸ்ரீபாகவதம் ஆதியிலும்

இடையிலும் முடிவிலும் வைராக்யத்தை உபதேசித்து ஸர்வ வேதாந்த ஸாரமாய் ப்ரஹ்மாத்மைகத்வத்தைக் கூறுவதாய் அத்விதீயமான பரம்பொருளிலேயே கருத்துடையதாய் கைவல்யத்தைப் பயப்பதாயுள்ளது என்று ஸூதபுராணிகர் முடிவுகட்டி யிருக்கிறார் என்பதைக் காட்டி, மரண பயத்தால் வருந்திய பரீக்ஷித் மன்னனுக்கு ஆக்யானங்களால் உபதேசிக்கப்பெற்ற அத்வைத வுண்மை தெளிவாக விளக்கப்படுகின்றது. தசம ஸ்கந்தத்தில் 'ஸமஸ்த ப்ரபஞ்சமும் ஸ்வப்னம்போல் பொய்யானதே; மாயையால் உள்ளது போலத் தோன்றுகின்றது" என்றும் 'கடவுளை உபநிஷத்களால் குருவின் உபதேசமூலம் அறிந்தவர் பொய்யான ஸம்ஸாரத்தைக் கடந்தவர்போலாவர்' என்றும் 'கயிற்றில் ஸர்ப்ப பாவனையைப் போக்கிக் கொள்வதன்றி கயிற்றின் ஸ்வரூபத்தை யறிவது வேறு உண்டோ' என்றும் உள்ளதும் திரிமூர்த்தி பேதம் ஒரே புருஷனின் ஸம்ஜ்ஞைகள் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வால்மீகி ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம் இவற்றுள் "தத்வாகாரஸம் ஸநாதனம்" என்று உத்திரகாண்டத்திலுள்ள சொற்றொடர் முதலியவைகளால் 'ப்ரஹ்மம் நிர்குணம்; அதுவே ஸகுணமாக உபாஸகர்களின் அனுக்ரஹத்திற்கு அமைகின்றது; அது மாயாதீதம்; ஸ்ருஷ்டி மாயையின்செயல்' முதலிய அத்வைதக் கருத்துகள் வால்மீகிராமாயணத்தி லிருப்பதைக் காட்டி, அத்யாத்ம ராமாயணத்தில் பார்வதீ பரமேசுவர ஸம்வாதத்திலும் காண்டந்தோறுமே அத்வைதக் கருத்துகள் மிளிர்கின்றன என்பதையும் மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாலுள்ளது ப்ரஹ்மம் என்பதையும் கூறி, ஆனந்த ராமாயணத்தில் கிளிஞ்சிலை திருஷ்டாந்தமாகக் காட்டி ஜகத்மித்யை என்றும் ப்ரஹ்மமே ஸத்யமென்றும் எல்லா உபநிஷதங்களும் ப்ரஹ்மாத்வைதத்தைக் கூறுகின்றன என்றும் அறிவுறுத்துவதைக் கூறி

விளக்குகின்றது மற்றொரு கட்டுரை. ஸ்ரீ பகவத் கீதை யின் இரண்டாவது அத்தியாயத்திலுள்ள பகவதுபதேசத் தின் தாத்பர்யம் த்வைதமும் விசிஷ்டாத்வைதமும் ஆக மாட்டா என்று பூர்வ பக்ஷங்களைக் கண்டித்து, ஜகத்மித்யை என்பதையும் ஜீவபரர்களின் ஐக்யத்தையும் போதிப்பது தான் அவ்வுபதேசத்தின் கருத்து என்று சித்தாந்தஞ் செய் வது இன்னுமொரு கட்டுரை.

இரண்டு கட்டுரைகள் துளஸிதாஸ ராமாயணத்தை விமர்சனஞ் செய்து, தாத்பர்யத்தை நிர்ணயிக்கும் ஆறுவித லிங்கங்களாலும் அத்வைதமே தாஸருக்குத் தாத்பர்யம் என்று காட்டி, காண்டந்தோறும் நேரடியாகவும் ஸம்வாத மூலமாகவும் ப்ரபஞ்சம் மித்யைஎன்றும் ப்ரஹ்மமே ஸத்யம் என்றும் வேறுபலவாறும் கூறும் துளஸிதாஸரின்கொள்கை அத்வைத உண்மைதான் என்று நிரூபிக்கின்றன.

வேத வாக்கியங்கள் பிரபுவைப் போலவும் புராணங்கள் நண்பர்களைப் போலவும் காவியங்கள் காதலியைப் போல வும் உண்மைகளைக் கூறுகின்றன என்று மம்மடர் கூறியிருப் பதைக் கொண்டு, ஶ்ருதி ஸ்ம்ருதி புராணங்களால் விளக்கப் பட்ட அத்வைதக் கருத்துகள் எவ்வாறு சிசுபாலவதம், கிரா தார்ஜுனீயம், நைஷதம், வேணீ ஸம்ஹாரம் முதலிய காவி யங்களிலே அமைந்துள்ளன என்பதை ஒரு வியாசம் விளக்கு கின்றது. நிர்குணமான ப்ரஹ்மத்தைப் பூஜிக்க முயல்வது தலைமயிரில்லாதவனுடைய தலையைச் சிங்காரிப்பது போன்ற தாம் என்று சிசுபாலன் வாக்கிலே வைத்துக் கூறுகிறார் ஸ்ரீ மாக கவி. காவியங்களிலுள்ள ஸ்தோத்ரங்களிலேயும் அத்வைதக் கருத்துகள் மிளிர்கின்றன. 'உன்னை யறிவதே உண்மையறிவு' என்கிறான் அர்ஜுனன் பரமசிவனை நோக்கி. "ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதால் பகவான் மூன்று பிரிவை அடைகிறான்' என்பது பீஷ்மஸ்துதி; யுக்தி யாலும் சாஸ்திரங்களாலும் பரம்பொருள் ஒன்றே ஸத்யம்

என்றும் பிரபஞ்சம் மாயாகல்பிதம் என்றும் நைஷதம் அறிவுறுத்துகின்றது. அலங்கார சாஸ்திரங்களும் "பரம்பொருள் ஆனந்தமயமானது; அஜ்ஞானமாகிய திரை நீங்கி ஆனந்தமயமான பொருள் பிரகாசிப்பதே ரஸானுபவமாகும்; இந்த ஆனந்தம் புதிதாகவும் வேருகவும் வெளியிலிருந்து வருவதன்று" என்று கூறி அத்வைத ஸித்தாந்தத்தையே பிரதிபாதிக்கின்றன.

அத்வைதானந்த ஸ்வரூபத்தை விளக்கும் வேருெரு வியாசம் "வீடுவாசல் முதலியவை சுக சாதனங்கள் அல்ல; இவையின்றியே ஸுஷுப்தியில் சுகமாயுள்ளது; ஆகையால் ப்ரஹ்மமே சுகம்" என்றும் ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்றே என்றும் வேதம் கூறியுள்ளதைக் கொண்டு, "மனம் சஞ்சலித்தால், சுகம் வெளியாவதில்லை; விஷயங்களிலே மனம் ஈடுபட்டுச் சலிக்கின்றது; ஒன்று கிடைத்தால் மற்றவையும் வேண்டும் என்று ஆசைப்படுகின்றது. இதற்கு ஒரெல்லையில்லை. விஷயசுகமும் துச்சம். ஆகையால் விஷய வைராக்யத்தால் காமங்கள் நசிக்கவேண்டும். காமமூலமான அஜ்ஞானம் நாசமுறும்போது, ஆனந்தமயமான ஆத்மா பிரகாசமாகின்றது" என்று வேதம் போதிப்பதை விளக்குகின்றது. அடுத்தவியாசத்திலே ஸ்வப்னமும் ஸுஷுப்தியும் எவ்வாறு அத்வைதத்தை விளக்குகின்றன என்பது கூறப்படுகின்றது. ஸ்வப்னம் மித்யை என்பது லோகானுபவம்; ப்ரஹ்மஸூத்ரமும் இதை மாயாமாத்ரம் என்று நிரூபித்துள்ளது. மாயை என்ருல் பொய்; ஸ்வபனமும் ஸத்யம் என்னும் வாதம் பொருந்தாது; ஸ்வப்னத்தைப்போல ஜாக்ரத் ப்ரபஞ்சமும் மித்யை என்பது அத்வைதம். ஆத்மா ஸ்வயம்ஜ்யோதி என்பதை அறிவுறுத்துவதற்கு ஸ்வப்னம் பயன்படுகின்றது. 'ஸ்வப்னத்திலே காணப்படும் சூர்யன், காண்போன் காணுங்கண் இவை இல்லை; அதுபோல் ஆத்மா ஒன்றே உள்ளது' என்று நிரூபிக்க உதவுகின்றது. ஸுஷு

ப்தி நிலையும் மோக்ஷத்திற்குத் திருஷ்டாந்தமாய் அமைகின்றது. ஸுஷுப்தியில் ஆத்மா இருந்தும் பிரபஞ்சம் இல்லையாகின்றது; ஆனால் ஸுஷுப்தியில் அஞ்ஞானம் நீங்கவில்லை என்பது ஒரு வித்யாசம். ஜாக்ராவஸ்தையிலே தோன்றும் கர்த்ருத்வம் முதலிய உபாதிகள் இல்லை என்பது ஸாம்யம். கர்தருத்வம் முதலியவை ஔபாதிகம் என்பதும் இதனால் ஸ்தாபிதமாகின்றது.

முடிவுரையாக, அத்வைத ஸித்தாந்த ஸ்வரூபம் தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. "ஆத்மா சரீரம் இந்திரியம் முதலியவற்றினும் வேறானது, ஆயினும் ஆத்மா சரீராதிகளில் அத்யாஸஞ் செய்யப்பட்டு வியவகரிக்கப்படுகின்றது. ஆத்மா ஆனந்தரூபமானது; எங்குமே வியாபித்திருப்பது; ஆதலால் அது போகும் வரும் என்பதில்லை; கர்த்ருத்வம் முதலியவை புத்திதர்மமே; ஆத்மா நிர்விகாரமானது, ஸர்வஸாக்ஷி; மூன்று அவஸ்தைகளும் ஆத்மாவிற்கு இல்லையாகையால் அவை மாறிக்கொண்டிருக்கின்றன; எங்கும் ஒரே ஆத்மாதான் உள்ளது; பேதமாகவும், பலமாகவும் தோற்றுவது உபாதியினால்; ஸகுணம் உபாஸனைக்காகக் கல்பிதம்; வேதத்திற்கு அதில் பரமதாத்பர்யமில்லை" என்று முடிவு கூறியபின், இந்த அத்வைத நிலைபெறுவதற்கான ராஜயோகமார்க்கமும் இறுதிக் கட்டுரையாலே விளக்கப்படுகின்றது ராஜயோகத்தால் ஜீவன் ப்ரஹ்மமே யாகிறான்.

## —2—

தமிழ்க் கட்டுரைப் பகுதி ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அருளிய ஸ்ரீமுகத்தின் தமிழ் மொழி பெயர்ப்போடு தொடங்குகின்றது. இது, 'உண்மையை யுணர விரும்புவோர் எவ் வுண்மையை உணர்ந்து பூர்ண சாந்தியை அடைகின்றனரோ அதுவே உண்மை' என்று உண்மையின் இலக்கணத்தைக் கூறி, 'ஒருமையை உணர்பவனுக்கு மயக்க

மேது?, துயரமேது?' என்று உபநிடதம் கூறுதலால் ஒருமையே உண்மை என்றும் அத்வைத வித்யைதான் துயரங்களை யெல்லாம் வேருடன் அழிக்க வல்லது என்றும் அப் பிறவிக்குக் காரணம் கருமம் என்றும் கருமங்களுக்கு மூலம் பற்றே என்றும் அப்பற்றுகிய குற்றத்திற்குக்காரணம் இரண்டாவது பொருளின் தோற்றத்தால் வரும் அச்சமே என்றும் இரண்டாம் பொருளின் தோற்றத்திற்குக் காரணம் பொய்யறிவு என்றும் அப் பொய்யறிவும் இரண்டற்ற ஒன்றை அறிந்துணர்ந்து அனுபவிப்பதாலேதான் நீங்கும் என்றும் விளக்குகின்றது. காரணமாகிய மண்ணினும் காரியத்தில் எஞ்சியுள்ளவை பெயர் வேறுபாடும் உருவ வேறுபாடுமே, அதாவது, நாமரூபங்களே. 'கார்ய உருவம் வாயால் மொழியப்படும் பெயர்; மண் என்பது மட்டுமே உண்மை' என்று வேதம் கூறுவதிலுள்ள ஏகாரத்தால் காரிய வுருவம் கற்பனை' என்பதும் காரணமே உண்மை யென்பதும் தெளிவு. இது தான் அத்வைத சித்தாந்தம்.

முன்னுரையாக, அத்வைதத்தின் உண்மையும் அருமையும் விளக்கப்படுகின்றன. மரத்திலே இலைகளும் பூக்களும் பிஞ்சுகளும் காய்களும் இருக்கின்றன. வேர் ஒரு ருசி; பட்டை துவர்ப்பு; இலை கசப்பு; காய் புளிப்பு. தித்திப் பாகப் பழுத்தப்பழம் காம்பினின்று விடுபடுகின்றது. விடுபடுதலே மோக்ஷத்திற்கு உவமானம். சாஸ்திரங்களும் நூல்களும் விருக்ஷம் போன்றன. வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் மதநூல்களிலும் எங்கும், வேரும் பட்டையும் இலையும் பிஞ்சும் காயுமே மிகுந்திருப்பதைப் போலவே, த்வைத எண்ணங்களே காணப்படுகின்றன. ஆனால் கருத்து முதிர்ச்சி பெறும்போது, தான் என்பதை இழந்ததான பழம் போன்ற அத்வைதானந்தம் காணப்படும். கசப்புச் சுவையுடைய வேப்ப மரத்தின் பழமும் தித்திக்கும். புளியம் பழமும் தித்திப்புடைய தாகும். இது போன்றே, வேறு

மதங்களிலேயே பற்று மிகுந்தவர்களின் வாக்கிலும் அனுபவ முதிர்ச்சியால் அத்வைதமே மிளிரும் என்பதற்குப் பல உதாரணங்களைக் காட்டி, சித்தாந்தங்கள் எல்லாம் அத்வைதத்திலே முற்றுப் பெறுகின்றன என்று விளக்குகின்றது இம் முன்னுரை.

அடுத்துள்ள அத்வைத சித்தாந்த வினவிடை 'சகல வித்தைகளின் உட்கருத்தும் பிராசீன ஆசிரியர்களின் உள்ளக் கருத்தும் அத்வைதமே' என்று அப்பைய தீக்ஷிதர் கூறியுள்ளதை விளக்குகின்றது; 'த்வைதமே அத்வைத ஞானத்தை உண்டு பண்ணும்' என்னும் தாயுமானவர் திருவாக்கையும், 'திருக்குறளும் உபநிடதங்களும் தேவாரமும் பிரும்மசூத்திரமும் திருவாய்மொழியும் எல்லாம் ஒன்றையே கூறுகின்றன' என்னும் ஔவைப் பிராட்டியின் திருவாக்கையும் எடுத்துக்காட்டி, தமிழ் நாட்டிலும் அனுதியாகப் பரவி யிருந்த சமய வுண்மை வேதசமய வுண்மையே என்பதை தமிழ் மொழியிலே வேத வேதாந்தங்களுக்கும் யஜ்ஞத்திற்கும் ஒத்து, மறை, வேள்வி என்னும் பதங்கள் இருப்பதைச் சான்றாகக்காட்டுகின்றது. நாயன்மார்களிலும் சித்தர்களிலும் ஒருசேர விளங்கும் தனிச் சிறப்புடைய திருமூலரின் திருமந்திரத்தில், வேதாந்த தத்துவத்தை விளக்கும் பாடல்கள் பல இருப்பதைக் காட்டியும், தாயுமானவர் 'அத்துவித மெய்கண்ட நாதன்' என்று மெய்கண்டாரைப் போற்றியிருப்பதையும் அந்தத் தாயுமானவர் பல இடங்களிலே அத்வைதச் சொற்களை உபயோகித்திருப்பதையும், மாணிக்க வாசகர் 'நீயலாற் பிறிது மற்றின்மை' என்றும் 'ஒன்று நீ யல்லை யன்றி யொன்றில்லை' என்றும் கூறியிருப்பதையும், இதைக்கொண்டு உமாபதி சிவாசார்யர் 'மாணிக்கவாசகரும் அத்வைதியாய்விடுகிறார்' என்று கூறுவதையும், அத்வைதத்திற்கே சிறப்பான உதாரணமாகிய வேடனகை வளர்ந்த அரச குமாரன் கதையை ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களைப் போல,

சிவஞான போதமும் கூறுவதையும், சைவ சித்தாந்த நூல்களிலே அத்வைதக் கொள்கைகள் மிகுந்து காணப்படுவதையும் எடுத்துக் கூறி 'அத்வைதம்' என்னும் சொல்லின் பொருளும் விளக்கப்படுகின்றது. வினாவிடையாகவே, வேதத்தினுள்ள த்வைதத்தைக் குறிப்பிடும் பாகங்கள் அர்த்த வாதம் என்றும் அனுமானம் என்றும் விளக்கப் பெறுகின்றன. "இதரப் பிரமாணங்களால் அறியக்கூடியவற்றை வேதம் அறிவிப்பதில் நோக்கமில்லை. வேறு வகையில் அறியக் கூடாததையே வேதம் அறிவிக்க எழுந்தது. ஐவகைத் துவைதமும் பிரத்யக்ஷஅனுமானங்களால் அறிதற்குரியவை. ஸர்வ பரிபூர்ணமான பரமாத்ம அத்வைத ஞானமே பிரமாணங்களால் அறிய இயலாதது; அதை அறிவிப்பதாலேயே வேதம் வேதமாகின்றது. துவைத ஞானம் அத்வைத ஞானத்திற்கு வேண்டுவது; ஆனால் அத்வைத ஞானம் துவைதத்திற்கு அவசியமில்லை; ஆதலால், எந்த நூலிலும் பல துவைத வாக்கியங்களுக்கு இடையே ஓர் அத்வைத வாக்யம் காணப்பட்டாலும், அந்த நூலுக்கு அத்வைதமே தாத்பர்யம்; அத்வைத ஞானம் தெளிவாதற்கு முன் சித்த சுத்தி ஈசுவர பக்தி இவை வேண்டுமாதலால், கருமோபாஸனைகள் அத்வைதப் பிரும்ம சாக்ஷாத்காரத்திற்கு முதற்படிகளாம்" என்று முடிவு கட்டுகின்றது. பிறகு அத்வைத சித்தாந்தத்தின் தனிப்பட்ட கருத்துக்களைத் தமிழ் நூல்களினின்றும் மேற்கோள்களைக் காட்டி, தெளிவாக விளக்குகின்றது. அவையாவன: (2) ஒன்றேயான பரம்பொருளே எல்லாமுமாய்த் தோன்றுகின்றது (2) உலகத் தோற்றம் மெய்யன்று (3) ஞானத்தால் மட்டுமே முக்தி (4) சீவனும் பரம்பொருளும் வேறல்லர் (5) பரம்பொருள் நிர்க்குணமானது (6) ஜீவன்முக்தி (7) ஸத்யத்தின் மூவகை நிலை (8) ஹரனுக்கும் ஹரிக்கும் பேதமில்லை என்பன.

'தொல்காப்பியத்தில் அத்வைதம்' என்னும் கட்டுரை ஹரிஹரப் பிரும்மா மூவரும் ஒருவரே என்று குறிப்பதைக் காட்டும் முக்கோல் அந்தணர்க்கு உரியது என்பதால் அந்தணர் அத்வைதிகள் என்பதையும், போரிலே உயிர் துறப்பவனைப் பற்றிக் கூறுங்கால் 'ஒல்லார் நாண.... ஒன்றொடு புணர்ந்து தொல்லுயிர் வழங்கிய வவிப்பலியானும்' என்னும் சூத்திரப்பகுதியால் அத்வைத வுண்மையாகிய சீவப் பிரும்ம ஐக்கியம் சுட்டி யுணர்த்தப் பெற்றது என்பதையும், 'மூன்றிறவாது' என்பதால் 'தத், த்வம், அஸி' என்னும் அத்வைத மகா வாக்கியத்தைக் குறிப்பிடுவதையும் எடுத்துக் காட்டுகின்றது.

'திருக் குறளில் அத்வைதம்' என்னும் கட்டுரை, முதற் குறளிலே கடவுள் முதற்காரணம் என்னும் அத்வைதக் கருத்தை உவமையால் விளக்கியிருப்பதையும், 'கடவுள் வாழ்த்'திலே 'மலர்மிசை யேகினான்' என்று பிரமனையும் 'பொறி வாயிலைந் தவித்தான்' என்று ஹ்ருஷீகேசனை விஷ்ணுவையும் 'அறவாழி யந்தணன்' என்று மீண்டும் அத் திருமாலையும் 'எண்குணத்தான்' என்று பரமசிவனையும் ஒருங்கே குறிப்பிட்டு அத்வைதக் கருத்தாகிய மும்மூர்த்திகளின் அபேதத்தைக் காட்டுகிறார் என்பதையும் 'இருள்சேரிருவினை' என்னுஞ் சொற்றொடரில் மாயை அநிர்வசனீயமாகையால் 'இருள்' என்னப்பட்டதாகையால் இக்குறள் அத்வைத பரமாயுள்ளது என்பதையும், மோக்ஷமடைவதற்கு பற்றற்றவர்களின் சேர்க்கையும் பற்றற்ற ஈசனிடத்துப் பற்றும் வேண்டும் என்பதைக் காட்டும் குறளும் அத்வைதக் கருத்தாகிய ஜீவன்முக்தர்கள் அனைவரும் பிரும்மமே என்பதைக் குறிப்பதையும் 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும்' என்று தொடங்கும் குறளால் கற்பனையான பல் வேறு பொருளினும் மெய்ப் பொருளான ஒன்றையே காண்பது ஞானம்' என்ற அத்வைதக் கொள்கை அமைந்திருப்

பதையும், அஞ்ஞானம் நீங்கிய ஞானத்தால் மோக்ஷம் என்னும் அத்வைதக் கருத்து 'இருணீங்கி' என்னும் குறளிலே அமைந்துள்ளதையும், 'இன்பமிடையறு தீண்டும்' என்பதாலும் 'ஆராவியற்கை' என்பதாலும் ஜீவன்முக்தி குறிப்பிடப் படுவதையும் விளக்குகின்றது.

சைவத் திருமுறைகளிலும் முக்கியமாகத் திருமந்திரத்திலுமுள்ள அத்வைதக் கருத்துகள் ஆராயப்படுகின்றன. அத்வைதவாதிகளையே வேதாந்திகள் என்று கூறி அவ்வேதாந்தத்திற்கும் சைவசித்தாநதத்திற்கும் அதிகம் பேதமில்லை என்றும் 'சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்' என்றும் அது 'சிவனைப் பரமனுட் சிவனுட் காட்டும்' என்றும் வேதாந்தங் கண்டோர் பிரும்மம் ஸத்யம் ஜகத்மித்யை என்பவர் என்றும் இவர்களின் பாதமே சற்சீடனால் தலைவணங்குதற்குரியது என்றும் ஒன்றேயான பரம்பொருளே எல்லாமுமாய்த் தோற்றுகின்றது என்று பலபாடல்களிலே குறிப்பிட்டும் 'சீவனெனச் சிவனென்ன வேறில்லை' என்றும் 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்' என்றும் 'தான் அவன் ஆனபின் ஆரை நினைவது?' என்றும் 'மாயை மறைந்திடுமன்றே இவனுமவனுமே' என்றும் 'நான் என்றும் தான் என்று இரண்டில்லை' என்பதே ஞானம் என்றும் 'முத்திக்கு வித்து முதல்வன் தன் ஞானமே' என்றும் வேறு இவ்வாறே காணப்படும் வாக்கியங்களும்தொகுக்கப்பெற்று, திருமந்திரத்தின் தாத்பரியம் அத்வைதமே என்று விளக்கப்பட்டுள்ளது. மும்மூர்த்திகளின் அபேதமும் 'கடங் கடந்தோறும் தோன்றும் கதிரவன் அவற்றிலடங்காதது போன்றது சிவன் பலவற்றிலும் அடங்காது நிற்பதும்' என்றும் 'ஞானத்தின் மிக்கவை நன்முக்திநல்காவாம்' என்றும் அத்வைதப் பொருளையே திருமூலர் விளக்குகின்றார் என்று நிரூபிக்கப்படுகின்றது. மற்றைத் திருமுறைகளிலும் ஆங்காங்குக் காணப்படும் அத்வைத பரமான வாக்கியங்களைக்

கொண்டு அவற்றிற்கெல்லாம் அத்வைதமே பரமதாத்பர்யம் என்று விளக்கப்படுகின்றது. 'யான் என்றும் தான் என்றும் இரண்டில்லை என்பதனை யான் என்றும் கொண்டிருப்பன்' என்கிறார் நக்கீரதேவர்; பட்டினத்துப் பிள்ளையார் 'மாயப்பேய்த் தேர்போன்றும் நீப்பரும் தூக்கத்துக் கனவே போன்று நனவு பெயர்பெற்ற மாய வாழ்க்கை' என்பர்; அவரே 'மாயப்படலங் கீறி, தூய ஞான நாட்டம் பெற்றபின், யானும் நின் பெருந் தன்மையுங் கண்டேன்.... நின்னைக்காணு மாந்தர் தன்னையுங்காணுத் தன்மையோரே' என்பர். மும்மூர்த்திகளின் ஐக்கியத்தை 'மூவிலையொரு தாட் சூல மேந்துதல் மூவரும் யானென மொழிந்தவாறே' என்று குறிப்பிடுவர். காரைக்காலம்மையார் 'அறிவானும்தானே, அறிவிப்பான்தானே, அறிவாய் அறிகின்றான் தானே, அறிகின்ற மெய்ப்பொருளும் தானே' என்பர். அப்பர் சுவாமிகளும் 'ஞானமாமொன்றானைக் கண்டு கொண்டது என் உள்ளம்' என்றும் 'ஞானப் பெருங்கடல்' என்றும் 'நன்றுங்கறிந்தவர்க்குந் தானேயாகி' என்றும் 'ஒருவனாய் நின்றான் இவ்வுலகெல்லாம்' என்றும் அத்வைதபரமாகவே பாடுகிறார்; 'இருவருமொருவனாய உருவம் அங்குடைய வள்ளல்' என்று விஷ்ணுசிவாபேதங் கூறுகிறார். திருஞான சம்பந்த மூர்த்திகளும் 'மலரோன் செங்கண்மால் ஈசன் என்னும் மூவராய முதலொருவன்' என்றும் 'மறையவன் உலகவன் மாயம் அவன்' என்றும் கூறுகிறார். சுந்தர மூர்த்திகளும் 'நானாய பரன்' என்றும் 'பலவுருவும் தன்னுருவேயாய பெருமான்' என்றுங்கூறி 'வாழ்வாவது மாயம், இதுமண்ணாவது திண்ணம்' என்றும் 'பொய்த் தன்மைத்தாய மாயப் போர்வையை மெய்யென்று எண்ணும் வாழ்வு' என்றும் ஜகத்மித்யை என்பதை விளக்குகிறார். மாணிக்கவாசகப்பெருமானும் 'இந்திரஞால விடர்ப்பிறவி' என்றும் 'உடற்பிறவி மெய்யென்று' கொள்வதை இகழ்ந்தும், 'மாயுவாழ்க்கை

யை மெய்யென்றெண்ணி மதித்திடா வகை நல்கினன் ஈசன்' என்று அவனருளை வியந்தும், 'வேறோர் பரிசு இங்கொன் றில்லை மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கில்' என்றும் அத் வைதமே கூறுகிறார். சேக்கிழாரும் 'எப்பொருளுமாய் நின் றார்' என்றும் 'எம்பெருமான் சிவனே எல்லாப் பொருளும்' என்றும் 'ஈசன் ஸத்யஞான ஸ்வரூபன், அவனே தாமும் என்று அனன்னியமாய்ச் சிந்திப்பவர் அஞ்ஞானம் அக லவே ஜீவன்முக்தராவர்' என்னும் பொருளிலே 'மெய்மை யாகி விளங்கொளி தாமென இம்மையே நினைவார்தம் இரு வினைப் பொய்ம்மை வல்லிருள் போக்குவர்' என்றுகூறி அத்வைதத்தையே நிலைநாட்டுகிறார். திருவாசகத்தில் 'பேத மில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவள்ளல்' என் றும் 'ஈசனே நீயல்லதில்லை இங்குமங்கும் என்றும் பேசி னேன் ஓர் பேதமின்மை' என்றும் உள்ளது அபேதங் கூறும் அத்வைதமே யன்றோ?

சைவத் திருமுறைகளிற்போலவே நாலாயிர திவ்யப்பிர பந்தங்களிலும் அத்வைதக் கருத்துகள் ஆங்காங்கு மிளிர் கின்றன. 'ஒடுங்க அவன்கண்; ஒடுங்கலும் எல்லாம் விடும்' என்று மோக்ஷோபாயங் கூறி 'நன்றாய் ஞானம் கடந்து போய்..........பசையற்றால் அன்றே அப்பொழுதே வீடு அதுவே வீடு வீடாமே' என்று மோக்ஷஸ்வரூபத்தையும் ஜீவன்முக்தியையும் விளக்கின்றது திருவாய்மொழி; ஞானத்தை 'யோகு' என்னும் சொல்லாற் கூறி, 'அனைத்து லகுக்கும் பிரானை அமர மனத்துள் யோகுபுணர்ந்து அவன் தன்னோடு ஒன்றாக அமரத் துணியவல்லார் ப்ரஹ்மமே யாவர்; மற்றவர்களுக்குப் பக்தியே உபாயம்' என்றும் 'ஞானக்கைதா, காலக்கழிவு செய்யேல்' என்றும் 'மிக்கஞான மூர்த்தியாய வேதவிளக்கினை என் தக்க ஞானக்கண் களாலே கண்டு தழுவுவன்' என்றும் ஞானத்தின் பெரு மையே உணர்த்தப்படுகின்றது. 'வீடுபெற்ற குருகூர் சட

கோபன் சொன்ன' என்பதால் இவ்வாழ்வார் ஜீவன்முக்தர் என்பது தெளிவாகின்றது. திருவாய்மொழி ஆதிமுதல் அந்தம்வரை மும்மூர்த்திகளின் ஐக்யத்தையே வற்புறுத்துகின்றது. பாரமார்த்திக தத்துவம் ஒன்றேதான் என்னும் அத்வைத வுண்மை 'இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும் நீயே; மற்றொரு பொருளுமின்றி நீ நின்றமையால்' என்பது முதலிய வாக்கியங்களிலும் ஜீவப்ரஹ்மைக்யம் 'கடல் ஞாலம் செய்தேனும் நானே' என்று தொடங்கும் திருவாய்மொழியிலும் 'காயமும் சீவனும் தானே' 'யானே நீ.' 'தானே யான் என்பானாகித் தன்னைத் தானே துதித்து' 'மேவுந்தன்மையன் ஆக்கினான் வல்லன் எம்பிரான்' 'யானும் தானாய் ஒழிந்தான்' முதலிய வாக்கியங்களிலும் உணர்த்தப்படுகின்றன. 'தானே தானே யானல் இந்த பக்திரஸம் இல்லாது போமே' என்று கூறி அத்வைத மோக்ஷ நிலையையே ஸம்வதிக்கிறார் மற்றை யாழ்வார்களை அங்கமாகக் கொண்ட நம்மாழ்வார். போய்கையாழ்வார் ஹரிஹராபேதத்தை விளக்கிய வெண்பா பிரசித்திபெற்றது. பேயாழ்வார் 'தானே தனக்கு உவமன்; தன்னுருவே எவ்வுருவும்' என்று கூறுகிறார். திருமழிசைப் பிரானும் 'வேறொருவர் இல்லாமை நின்றானை எம்மானை எப்பொருட்கும் சொல்லானை'ச் சொல்கிறார். நீயே எப்பொருளும், ஆதலால் சீவனாகிய நானும் நீ; ஈசுவரனாகிய ராமனும் நீயே" என்கிறார் திருச்சந்தவிருத்தத்திலே. திருமங்கை மன்னனும் மும்மூர்த்திகளையும் ஒன்றென்றே கூறி, அவனே எப்பொருளுமாய் 'தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்த் தயங்கொளி சேர் மூவுலகும் தானாய்' விளங்குகின்றான் என்பர். இவ்வாறு சைவ வைஷ்ணவப் பாடல்களில் எல்லாம் அத்வைதமே மிளிர்கின்றது என்று சில கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அத்வைதத்திற்கும் பக்தி சித்தாந்தத்திற்குமுள்ள ஒற்றுமைகளை விளக்குவது வேறொரு கட்டுரை. ஆத்ம விசாரத்தாலும் ஸத்ஸங்கத்தாலும் உண்டாகும் வைராக்கியமும் ஞானமும் பக்தியாலே உண்டாகும் என்பதுதான் வேற்றுமை. ப்ரஹ்மஸ்வரூபமும், ஜீவஸ்வரூபமும்இரண்டிலும்ஒன்றாகவே கொள்ளப்படுகின்றன. இரண்டிலும் பகவானுடைய அருள் இல்லையேல் மோக்ஷமில்லையாதலால், பகவானுடைய அருளைப் பக்திவழியாற் பெறுவது எளிதென்றும் பக்தி சித்தாந்திகள்கூறினும், அத்வைதம் அவர்களுக்கு உடன்பாடே. கம்பராமாயணத்திலும் திருப்புகழிலுமுள்ள அத்வைத நிரூபகமான வாக்கியங்களை விமரிசனஞ்செய்வன இரண்டு கட்டுரைகள். கம்பராமாயணத்தில் ஹரிஹராபேதமும், 'அலங்கலிற் தோன்றும் பொய்மையரவென' என்பதால் ஜகத் மித்யை என்பதும், விராதஸ்துதி, பிரும்மஸ்துதி முதலிய இடங்கள் அத்வைதபரமாய் அமைந்துள்ளன என்பதும் விளக்கப்பற்றுள்ளன. 'நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க' அருணகிரி நாதர் வேண்டுவதும் 'அத்வைதமான பர!'என்று போற்றுவதும் திருப்புகழ்க் கட்டுரையிலே காட்டப்படுகின்றன. அத்வைத சாஸ்திரமே வைதிகதரிசனமும் பிரும்மவாதமுமாம் என்பதைத் தமிழ்நூல்களை ஆதாரங்காட்டி நிரூபித்துள்ளது வேறொரு கட்டுரை.

வடமொழி விமர்சனங்களிலே விளக்கப்பெற்று அத்வைத சாஸ்திரத்திற்கே சிறப்பாக அமைந்த அம்சங்களைத் தொகுத்துக்கூறுவது இன்னுமொரு கட்டுரை. பகவத்பாதர்களுக்குப் பின்பும் பலர் பேதவாதத்தைக் கூறுவது புத்திபேதஞ் செய்யக்கூடாது என்னும் கருத்தை யுட்கொண்டே என்றும் 'அத்வைதம் பரம ரஹஸ்யம். அதனை உபதேசமூலம் பெறுவதற்கு எல்லோரும் அதிகாரிகளாக மாட்டார்கள்' என்றும் எடுத்துக்காட்டுவது ஒரு கட்டுரை.

'காம்போஜத்தில் கண்ட அத்வைதம்' என்னும் கட்டுரையிலே அங்கே காணப்படும் சிலாசாசனங்களில் அத்வைதக் கருத்துகள் மிளிர்வது கூறப்படுகின்றது. கணித சாஸ்திர வல்லுநரான பாஸ்கரர் முதலானோர் தங்கள் சாஸ்திரத்தாலும் அத்வைதக் கருத்துகளையே விளக்குகிறார்கள் என்பது ஒரு கட்டுரை.

'பக்தியில் ஊன்றிய சங்கீத கர்த்தாக்களான ஸ்ரீ. தியாகையர், புரந்தரதாஸர், ராமதாஸர், கோபாலகிருஷ்ண பாரதி, துகாராம், நாமதேவர் முதலானவர்கள் தங்கள் கிருதிகளிலே பக்தியைக் கூறும்போது, அந்தப் பக்தி அவர்களை முடிவில் அத்வைதானந்த அனுபூதியிலே கொண்டுபோய் விடுவதை அவர்களுடைய கிருதிகளைக்கொண்டே நிரூபிப்பது இறுதியிலுள்ள கட்டுரை.

## —3—

ஸ்ரீமுகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்போடு ஆங்கிலக் கட்டுரைப் பகுதி தொடங்குகின்றது. தலைமைக் கட்டுரையில், தற்கால பௌதிக சாஸ்திரங்கள் எவ்வாறு உண்மையை உணர வேண்டும் என்ற ஆசையிலே தோன்றி அவ்வாசையாயாலேயே வளர்ந்து வருகின்றன என்பதை எடுத்துக்காட்டி, அவை பிரத்யக்ஷானுமானங்களைப் பிரமாணமாகக்கொண்டு புத்தி யுக்திகளால் ஆராய்கின்றன என்றும் பாரமார்த்திகமான மத வுண்மைகளைக் காண முயன்ற பெரியோர் தங்கள் தூய அந்தக்கரணத்தில் ஒளிரும் ஒளியைக்கொண்டறிந்த உண்மைகளையே கூறினர் என்றும் இரு திறத்தார் கைக்கொண்ட முறைகளும் விமர்சனஞ் செய்யப்படுகின்றன. ரிஷிகள் கண்டறிந்த உண்மைகளையே தற்காலத்து பௌதிக சாஸ்திரங்களிலே ஆராய்ச்சி செய்வோரும் தங்கள் சாஸ்திர ரீதியாக ஸ்தாபிக்கின்றார்கள் என்றும் இவ்வாறு ஸ்தாபிக்கப்படுவன அத்வைத வுண்மைகளே என்றும் விளக்கப்படுகின்றது.

'பூர்ணமதః' என்று தொடங்கும் சாந்தி பாடத்திற்கு நேரான பொருள் கணித சாஸ்திரத்தைக்கொண்டே உணரலாகும் என்று கணிதத்தின் பெருமையைக் கூறி, அவ்வாறு அத்வைதபரமாக விளக்கிக் காட்டும் மற்ருெரு கட்டுரை "ப்ரஹ்மம் அனந்தம்; மாயை சூன்யம்; அனந்தம் சூன்யத்தைத்தாக்கிஞல் ஜகத் தோன்றும்" என்பதைக் கணித ரீதியிலே நிரூபிக்கின்றது. 'கணித சாஸ்திரத்திற்கு அடிப்படையும் அத்வைதம்; அது முற்றுப் பெறுவதும் அத்வைதத்திலேயே' என்பதை விளக்குவது மற்றுமொரு கட்டுரை.

மேஞட்டுத் தத்துவ சாஸ்திரங்கள் மதக் கொள்கைகள் இவற்றிற்கும் அத்வைதத்திற்கு முள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக் காட்டி, அத்வைதக் கருத்துகளை மேஞட்டார் அறிந்துகொண்டு அவற்றை எவ்வளவு அதிகமாகத் தங்கள் நூல்களிலே கையாண்டு வருகிருர்கள் என்பதை விளக்குவன இரண்டு கட்டுரைகள். அத்வைத சித்தாந்தம் ராஜீயக் கொள்கைகளேயும் அரசியலேயும் சரியாக அமைக்க எவ்வாறு உதவுகின்றது, உதவக்கூடும் என்பதை ஆராய்ந் தறிவிப்பது இன்ஞெரு கட்டுரை. உபநிஷத்களிலே யுள்ள கருத்துகளேத் தொகுத்துக்கூறி அவை யெல்லாம் அத்வைதபரமா யுள்ளதை விளக்குவது வேருெரு கட்டுரை; தாயுமான ஸ்வாமிகள் அத்வைத வுண்மைகளே அறிவுறுத்தும் வகையை எடுத்துக் காட்டுவது ஒரு கட்டுரை. அத்வைத சித்தாந்தத்திலுள்ள சிறப்பான அமிசங்களிற் சிலவற்றை விளக்குவது மற்றுமொரு கட்டுரை. வியாச பகவாஞுடைய தாத்பர்யத்தை விரிவாக ஆராய்ந்து நிர்ணயஞ் செய்து அத்வைதத்தை நிலே நாட்டுவது நீண்டதோர் கட்டுரை. சமீப காலத்திலே மேஞட்டு சாஸ்திர ரீதியில் நடத்திய ஆராய்ச்சிகளின் பயஞக, ஆஸ்திக புத்திக்கு விரோதமாயிருந்த ஆராய்ச்சியாளர் எவ்வாறு ஆஸ்திகர்க

ளாகி, அத்வைத வுண்மைகளை தங்கள் ஆராய்ச்சியாலும் மெய்ப்பிக்கிறார்கள் என்பதை விரித்துக்கூறி விளக்குவது இறுதிக் கட்டுரை. அத்வைதத்தை விளக்குகின்றவையாய், அச்சாகி யுள்ளவையும் அச்சாகாமல் ஏட்டுப் பிரதிகளாக வுள்ளவையுமான ஸம்ஸ்கிருத நூல்களைக் குறிப்பிடும் அட்டவணை யொன்று அனுபந்தமாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு வடமொழி, தென்மொழி, மேனாட்டு மொழியாகிய ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் அமைந்த பல கட்டுரைகளால் எல்லா நூல்களிலும், முக்கியமாக அனுபவ நூல்களிலும், வேத வேதாங்கங்களிலே பிரதிபாதிக்கப்பெற்ற அத்வைதமே மிளிர்கின்றது என்று பலவகையாலும் நிரூபிக்கப் பெற்றுள்ளமையால் இத் தொகை நூல் அத்வைதாக்ஷர மாலிகையாக விளங்குகின்றது.

ஓம் தத் ஸத்



ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

# ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாளுடைய அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீமுகத்துடனும் கூடியது. ரு. அ.

1. ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள் அருளிய **சிவ மானஸிக பூஜா, கீர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸ:** என்னும் நூல்கள் ஸ்ரீ. வே. நாராயணன், எழுதிய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடன் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர் பி.ஏ., பி.எல்., எழுதிய முகவுரையுடன் (2-ம் பதிப்பு) **0–10**
2. ஸ்ரீ பஜகோவிந்தம் — ஸம்ஸ்க்ருத மூலமும் ஸ்ரீ ஏ. எஸ். நடராஜ ஐயர், பி.ஏ., எம்.எல்., எழுதிய தமிழ் அனுவாதமும். **0–2½**
3. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம் — ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரமும், ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரியார், எம்.ஏ., பி.எல்., எழுதிய தமிழ் இங்கிலீஷ் அனுவாதமும், ராவ் ஸாஹிப் N. நடேச அய்யர் அவர்கள் எழுதிய ஆங்கில முன்னுரையுடன் கூடியது ... ... **0–12**
4. ஸ்ரீ முகுந்தமாலா — ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளியது. ஸாஹிதீ வல்லப ஸ்ரீ T. ஸுந்தராசார்ய ஸ்வாமிகள், பி. ஏ., பி. எல்., எழுதிய தமிழ் உரையுடன் கூடியது. ... **0—5**
5. ஸ்ரீ ப்ரச்னோத்தர ரத்ந மாலிகா — ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றியதை ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் தமிழில் உபதேசித்தது. (தமிழ் லிபியில்) ... **0–2½**
6. ௸ (தெலுங்கு லிபியில் தெலுங்கு அனுவாதத்துடன்) **0–2½**
7. ௸ (ஸம்ஸ்கிருத மூலமும் ஆங்கில அனுவாதமும்) ... **0–2½**
8. ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்நாகரம் – ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய பதின்மூன்று தேவீ ஸ்தோத்ரங்கள் அடங்கியது. **0–12**
9. ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி: — ஸ்ரீமத் ஆத்ய சங்கர பகவத் பூஜ்ய பாதர்கள் எழுதிய ஸம்ஸ்கிருத ஸ்தோத்ரமும் பண்டித N. அருணாசல சாஸ்திரியார் எழுதிய அநுவாதமும். **0—8**
10. ஸ்ரீ ஆர்யா ஷஷ்டி — ஸ்ரீ ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரம், தமிழ் ஆங்கில அனுவாதங்களுடனும், குறிப்புக்களுடனும், Dr. V. ராகவன், எம். ஏ., பி. எச்டி., எழுதிய முன்னுரையுடனும் கூடியது. **0–10**
11. ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த வர்ணனம் முதலிய ஐந்து சிவ ஸ்தோத்ரங்கள் — ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரமும், ப்ரஹ்மஸ்ரீ V. H. ஸுப்ரம்மண்ய சாஸ்திரிகள் எழுதிய தமிழ் அனுவாதங்களுடனும், திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் எழுதிய முன்னுரையுடனும் கூடியது ... **0–12**

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், கும்பகோணம்

The Liberty Press, Madras.